சர்வதேச கைம்பெண்கள் தின சிறப்பிதழ்
வியாழக்கிழமை 23 ஜூன் 2022

# தமிழருவி

அருவி: 02 | சாரல்: 23
தமிழின் தலைநிமிர்வு

சர்வதேச போதைப்பொருள் பாவனை மற்றும் கடத்தல்களுக்கு எதிரான தினம் ஜூன் 26




சர்வதேச கைம்பெண்கள் தினம் ஜூன் 23.

## போதையால் பேதை ஆகலாமா?

## விதவைகளின் குரலுக்கு செவிமடுப்போம்

## போதை காட்டும் பாதை பாதாளம்!

## கைம்பெண்களைக் கண்டுகொள்ளாத சமூகம்!

## காற்று வாங்கப்போகும் மோட்டார் சுந்தரம்பிள்ளைகள்!

## கைம்பெண்கள்...

நாம் கடந்துபோக முடியாத எங்களில் ஒருத்தி!

# நெருங்கிய நண்பராக ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்

## இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜனாதிபதியிடம் தெரிவிப்பு





நெருங்கிய நண்பராக ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு இலங்கைக்கு இந்திய அரசாங்கம் முழு ஒத்துழைப்பையும் வழங்கும் என இந்திய வெளிவிவகார செயலாளர் வினய் குவாத்ரா (Vinay Kwatra) தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு தொடர்ந்தும் நிதி உதவிகளை வழங்குதல் தொடர்பில் இன்று (23) முற்பகல் இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய விசேட தூதுக்குழு கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. இந்திய கடன் உதவியின் கீழ் எரிபொருள், மருந்து, உரம் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை இலங்கை ஏற்கனவே பெற்றுள்ளது. அது தொடர்பில் மீளாய்வு செய்த தூதுக்குழு, இலங்கைக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க இந்திய அரசாங்கமும் அரசியல் அதிகாரிகளும் அர்ப்பணிப்புடன் இருப்பதாக தெரிவித்துள்ளது.

கடினமான காலங்களில் இலங்கைக்கு உதவுவதில் இந்திய அரசாங்கம் கணிசமான பங்கை வகிக்கிறது. அதற்காக இலங்கை மக்களும் அரசாங்கமும் பாராட்டுகளையும் நன்றியையும் இந்திய அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் தெரிவித்துக் கொள்வதாக ஜனாதிபதி அவர்கள் தூதுக் குழுவினரிடம் குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், இயல்பு நிலைக்கு மாற்றவும் இந்திய உதவித் திட்டத்தின் எதிர்கால நடவடிக்கை குறித்து இரு தரப்பினரும் விரிவாக கலந்துரையாடினர். இக்கட்டான காலகட்டத்திற்குப் பிறகு நாடு மிக விரைவில் இயல்பு நிலைக்கு திரும்பும் என்று தூதுக்குழுவினர் நம்பிக்கை தெரிவித்தனர்.

இந்திய பொருளாதார உறவுகள் தொடர்பான செயலாளர் அஜய் சேத் (Ajay Seth), தலைமை பொருளாதார ஆலோசகர் கலாநிதி வி அனந்த நாகேஸ்வரன் (V Anantha Nag-eswaran), இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே, துணை உயர் ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் (Vinod K Jacob), இந்திய கடல்சார் பிராந்திய (IOR) ஒன்றிணைந்த செயலாளர் கார்த்திக் பாண்டே (Kartik Pande) மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் ஆகியோர் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# 1,400 லீற்றர் டீசலை பதுக்கி வைத்திருந்த வர்த்தகர் கைது

சட்டவிரோதமான முறையில் 1,400 லீற்றர் டீசலை பதுக்கி வைத்திருந்த வர்த்தகர் ஒருவர் கொட்டாவ, மாகும்புர பகுதியில் வைத்து இன்று கைது செய்யப்பட்டதாக மேல் மாகாண குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

குறித்த நபரின் வீட்டின் மாடியில் 500 லிற்றர் தொட்டியும், அவரது வணிக வளாகத்தில் மற்றொரு சிமிலேட் தொட்டியுமாக இரண்டு டீசல் பீப்பாய்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

சந்தேகநபர் இன்று ஹோமாகம நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# ஹிருணிகாவை அவமதிக்கும் படங்களை பகிர வேண்டாம்!

## பிரதமர் ரணில் சமூக ஊடக ஆர்வலர்களிடம் கோரிக்கை



ஹிருணிகா பிரேமசந்திரவை அவமதிக்கும் வகையில் அவரது புகைப் படங்களை பகிரவேண்டாமென கேட்டுக்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அநாகரிகமாக நடந்துகொள்ள வேண்டாம் என்றும் சமூக ஊடக ஆர்வலர்கள் மற்றும் பயனாளிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் பெண்கள் சக்தியினால் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டம். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்துக்கு முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அங்கு கடமையிலிருந்த பெண் பொலிஸாரை. ஹிருணிகா பிரேமசந்திர கட்டியணைத்தார்.

அதன்பின்னர், அவரை அவமதிக்கும் வகையிலான பதிவுகள் புகைப்படங்கள்சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டன. அதனையடுத்தே மேற்கண்டவாறு தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அரசியல் காரணங்களுக்காக ஹிருணிக்கா எனது வீட்டிற்கு அருகில் வந்து ஆர்ப்பாட்டம் செய்தார். அதனை நாகரீகமாக கருதி, அரசியல் ரீதியில் அணுகி தீர்க்கவேண்டும் அத்துடன், பெண்மையை, தாய்மையை கொச்சைப்படுத்தும் வகையில் எவரும் அநாகரீகமாக நடந்து கொள்ளக் கூடாது என்றும் தெரிவித்துள்ளார்.

# 20 ரூபா நாணயக்குற்றியை வெளியிட்டது இலங்கை மத்திய வங்கி




இலங்கையில் உத்தியோகபூர்வ சனத்தொகைக் கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டு 150 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளதை முன்னிட்டு இலங்கை மத்திய வங்கி அதனை நினைவுகூரும் வகையில் ரூபா 20 நாணயகுற்றி வெளியிடப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்ட நாணயகுற்றி நேற்றுமுன்தினம் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச். என்.ஜயவிக்ரமவிற்கு மாவட்ட புள்ளிவிபரவியலாளர் ச.சரீப்டீன் வழங்கினார்.

நினைவு நாணயக்குற்றி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்கள், உட்பட மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகஸ்தர்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் பிரதேச செயலாளர்களுக்கும் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட புள்ளிவிபரவியலாளர் தெரிவித்தார்.

# நாளை முதல் எரிபோருள் விலை மீண்டும் அதிகரிப்பு?

## எரிசக்தி அமைச்சின் உயர் அதிகாரி தகவல்

எரிபொருள் விலை சூத்திரத்திற்கு அமைய நாளை நள்ளிரவு முதல் எரிபொருள் விலை அதிகரிப்பபடவுள்ளதாக எரிசக்தி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் இன்று தெரிவித்துள்ளார்.

இந்த விலை உயர்வை வழங்கும்போது அனைத்து வகையான பெட்ரோல் மற்றும் டீசல் 60 ரூபாவால் அதிகரிப்படவுள்ளதாகவும் மண்ணெண்ணெய் 200 ரூபாயை விட அதிகரிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, ஒக்டேன் 92 பெட்ரோல் ஒரு லீட்டரின் விலை %4 ரூபாவாலும், ஒக்டேன் 95 பெட்ரோல் ஒரு லீட்டரின் விலை %8 ரூபாவாலும் டீசல் 56 ரூபாவாலும், சுப்பர் டீசல் விலை 65 ரூபாவாலும் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# வீட்டிலேயே பிரசவம் மேற்கோள்ளத் தயாராகும் குடும்ப சுகாதார சேவைப் பணியாளர்கள்!

கர்ப்பிணித் தாய்மார்களை வீட்டிலேயே பிரசவம் செய்ய தயாராக இருக்குமாறு அரச குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் சங்கம் தனது உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளது.

தற்போதைய எரிபொருள் நெருக்கடி காரணமாக கர்ப்பிணித் தாய்மார்களை வைத்தியசாலையில் அனுமதிக்க முடியாத நிலையில் வீட்டிலேயே பிரசவம் மேற்கொள்ளலாம் என அதன் தலைவி தேவிகா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் சூழ்நிலையில் போக்குவரத்து சிரமங்கள் உள்ளதால் எந்த நேரத்திலும் பிரசவத்தை எதிர்கொள்ளும் தாய்க்கு வசதிகளை செய்து கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

பிரசவத்தில் தலையிடுவதற்கான அனுமதியையும் அதிகாரத்தையும் இலங்கை மருத்துவ சபை தமக்கு வழங்கியுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# எரிபோருள் நிலையத்தில் போலிஸ் இராணுவ அதிகாரிகள் கைகலப்பு



எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவருக்கும் இராணுவ அதிகாரி ஒருவருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

வரக்காபொல, தும்மலதெனிய பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்தே, கைகலப்பாக மாறியுள்ளது.

வாக்குவாதத்தைத் தொடர்ந்து லெப்டினன்ட் கேர்ணல் பொலிஸ் அதிகாரியைத் தாக்கியதை பெட்ரோல் நிலையத்தில் உள்ள சிசிடிவி கெமராவில் பதிவாகியுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் வரக்காபொல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட லெப்டினன் கேர்ணல் வரக்காபொல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# பாம்புக்கடிக்கு மருந்தில்லை நாட்டில் 20 பேர் பலி!

பாம்பு விசத்தை முறியடிப்பதற்கான தடுப்புகள் மருந்து இல்லாமையால் இது வரையில் 20 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் கிசாந்த தசநாயக்க தெரிவித்தார்.

அடுத்த மூன்று வாரங்களுக்குள் மருத்துவம னைகளில் அத்தியாவசிய மருந்துகளுக்கும் கடுமையான தட்டுப்பாடு ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். சில மருந்துகளுக்குத் தற்போது பயன்படுத்தப்படும் மாற்று மருந்துகளும் அடுத்த 3 வாரங்களுக்குள் மருத்துவ



மனை களஞ்சியங்களில் இருந்து படிப்படியாக குறைவடையவுள்ளது என்றும் அவர் கூறினார்.

வைத்தியசாலை களஞ்சியங்களில் இருந்து 20 வீதமே மருந்துகள் வழங் கப்படுகின்றன என்றும், அவையும் எதிர் வரும் காலங்களில் நிறைவடையவுள்ளன என்றும் மருத்துவர் கிசாந்த தசநாயக்க சுட்டிக்காட்டினார்.

தற்போது வைத்தியசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நோயாளர் களுக்கு மாத்திரமே மருந்துகள் வழங்கப் படுகின்றன என்றும், வயதான நோயாளிகளை விட இளம் நோயாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.




**செய்தி:-**

குறுகிய காலம் பதுங்கு குழியில் இருந்த முன்னாள் பிரதமர் தற்போது வெளியில் வந்து, தனது வழமையான ஆட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

**அனுரகுமார திசாநாயக்க - மக்கள் விடுதலை முன்னணி.**

தடியெடுக்காத தண்டல்காரன் ஆட்டமிது.

## வவுனியா மாவட்டத்தில் பெற்றோல் விநியோகத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கே முதல் கட்டமாக எரிபொருள் அட்டை விநியோகம்

### டீசல் விநியோகத்திலும் புதிய நடைமுறை

வவுனியா மாவட்டத்தில் பெற்றோல் விநியோகத்தில் முதல் கட்டமாக அரச உத்தியோகத்தர்களுக்கே எரிபொருள் அட்டை விநியோகிக்கப்படவுள்ளதுடன், ஒன் லைன் பதிவுகள் முழுமையாக இடம்பெறும் என மாவட்ட செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எரிபொருள் விநியோக நடைமுறை குறித்து இன்று (23.06) கேட்ட போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் சீரான முறையில் எரிபொருள் விநியோகம் இடம்பெறுவதற்கான வழிவகைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் முதல் கட்டமாக அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் எரிபொருள் அட்டைகள் வழங்கப்பட்டு அதன் ஊடாக பெற்றோல் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெற்றோல் பெறும் அனைத்து வாகனங்களும் ஒன்லைனில் பதிவு செய்யப்படுவதுடன் பெற்றோல் கிடைப்பனவு மற்றும் தேவைப்பாடு என்பவற்றுக்கு ஏற்ப எரிபொருள் விநியோக அளவுகளில் மட்டுப்பாடுகள் கொண்டு வர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முச்சக்கர வண்டி சாரதிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்காத வகையில் அவர்களது முச்சக்கர வண்டிகளுக்கு பெற்றோல் வழங்குவதற்கான புதிய நடைமுறை ஒன்று ஆமல்படுத்தப்படவுள்ளது.

அத்துடன், சிறுபோக அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், டீசல் விநியோகம் தொடர்பில் அவசர கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தற்போது இரசேந்திரங்குளத்தின் கீழான பகுதிகளில் அறுவடை ஆரம்பித்துள்ளதால் அவர்களது அறுவடைக்கு தேவையான 3000 லீற்றர் டீசல் விநியோகம் நாளை (24.06) முதல் இடம்பெறும். வவுனியாவில் சிறுபோகத்தில் 12 ஆயிரத்து 238 ஏக்கர் நெல் செய்கை பண்ணப்பட்டுள்ளது. வருகின்ற யூலை முதல் கிழமையில் இருந்து ஓகஸ்ட் கடைசிக் கிழமை வரை இந்த அறுவடை இடம்பெறும் என எதிர்பார்கின்றோம். இதற்காக கிட்டத்தட்ட 3 இலட்சத்திற்கு மேலதிகமான டீசல் எரிபொருள் தேவைப்படுகிறது. இதனை ஒழுங்குபடுத்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

டிப்பர் முதலான கனரக வாகனங்களுக்கான டீசல் விநியோதகத்தில் மட்டுப்பாடுகள் கொண்டு வரப்படவுள்ளது. வவுனியா மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட தொழில் ரீதியான செயற்பாட்டை முன்னெடுக்கும் கனரக வாகனங்களுக்கு டீசல் விநியோகத்தில் முன்னுரிமை வழங்கவுள்ளதுடன், ஏனைய மாவட்ட டிப்பர் போன்ற கனரக வாகனங்களுக்கு சில கட்டுப்பாடுகளும் கொண்டு வரப்படவுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் எரிபொருள் விநியோகம் சீராக இடம்பெறுவது குறித்து தொடர்ந்தும் பரிசீலித்து வருவதுடன், எரிபொருள் தேவை குறித்து அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனவும் மாவட்ட செயலக அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பதில் அதிபர் ஒருவருக்கு ஏற்பட்ட நிலை

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முன்வைத்துள்ள கோரிக்கை

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பெற்றுக்கொள்ளச் சென்ற பெண் பதில் அதிபர் ஒருவர் தனது பிள்ளையுடன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

அரச உத்தியோகத்தர்களிற்கு எரிபொருள் வழங்கப்பட மாட்டாது என எரிபொருள் விநியோகத்தர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இந்த நிலையில் எரிபொருள் பெற்றுக்கொள்ள வந்த சிலரால் அரச உத்தியோகத்தர்களை தரக்குறைவாக பேசும் செயற்பாடுகள் பரவலாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடமைக்கு செல்ல எரிபொருள் பெற்றுக்கொள்ள சென்ற குறித்த பெண் பதில் அதிபர் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டார்.

இவ்விடயம் குறித்து பதில் அதிபர் கருத்து தெரிவிக்கையில்,

கடமைக்கு செல்ல வந்த என்னை தரக்குறைவாக பேசுகின்றனர். கல்வி வேண்டாம், பெட்ரோலே வேண்டும் என்கின்றனர்.

ஆசிரியர்கள் என்றால் தரக்குறைவானவர்கள் இல்லை. உங்கள் பிள்ளைகளிற்கே கல்வியை புகட்டுகின்றோம். இவ்வாறு சென்றால் பிள்ளைகள் முதல் எழுத்து கூட அறியாதவர்களாக வளர்வார்கள். எங்களிற்கு முறையான எரிபொருள் கிடைக்க வேண்டும். இல்லையேல் கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்க முடியாது. நாகரீகமின்றி தரக்குறைவாக பேசுமளவிற்கு ஆசிரியர்கள் இல்லை. இதற்கு நியாயமான தீர்வு வேண்டும்.

அதுவரை ஆசிரியர்கள் பணிக்கு செல்லாது போராட வேண்டும். இந்த விடயம் தொடர்பில் கல்வி அமைச்சர் மற்றும் தொழிற்சங்கத்திற்கு அறிவித்துள்ளேன். நிரநதரமான தீர்வு கிடைக்க வேண்டும். எமது கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும்' என தெரிவித்துள்ளார்.

குறித்த பெண் பதில் அதிபருடன் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் சிலர் கலந்துரையாடி போராட்டத்தை கைவிடுமாறு கோரியிருந்தனர். நிரந்தர தீர்வு எட்டப்பட வேண்டும் என கூறி போராட்டம் கைவிடப்பட்டதுடன், குறித்த பதில் அதிபர் பாடசாலை கடமைக்கு செல்வதற்கு எரிபொருள் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

இவ் விடயம் தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்



கோரிக்கை ஒன்றையும் முன்வைத்து உள்ளது.

ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு சமூகத்தின் விளக்குகள். தயவு செய்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களும் அரசாங்க அதிபர்களும் கல்வி அமைச்சும் கல்வித் திணைக்களமும் இதற்கு விரைந்து தீர்வுகாண வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலையே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தற்போது நாட்டில் உள்ள சூழ்நிலை எல்லோருக்கும் பொதுவானது.

ஆனால் ஆசிரியர்களின் கடமையும் அவர்கள் ஆற்றும் பணியும் வித்தியாசமானது. இந்த நிலையில் எரிபொருளுக்காக ஆசியர்களைக் காக்க வைப்பதும் அவர்களோடு அநாகரிகமாக நடந்து கொள்வதனையும் ஏற்க முடியாது.

சமூகத்தில் உள்ள குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் கல்வியூட்டி அவர்களைப் பெரியவர்களாக்கும் ஆசிரியர்களை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அவமானப்படுத்துவமும் புறக்கணிப்பதும் அநாகரிகமானது.

ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு சமூகத்தின் விளக்குகள். தயவு செய்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களும் அரசாங்க அதிபர்களும் கல்வி அமைச்சும் கல்வித் திணைக்களமும் இதற்கு விரைந்து தீர்வுகாண வேண்டும். கைகூப்பி வணங்கவேண்டிய ஆசிரியர்களை கைகாட்டி மெருட்டும் அளவிற்கு வைக்காதீர்கள்.

அது ஒட்டு மொத்த சமூகத்திற்கும் கேடாகும். இத்தகைய நிலை தொடருமாக இருந்தால் ஆசிரிய பணியில் இருந்து ஒதுங்கவேண்டிய நிலை ஏற்படும். இன்று கிளிநொச்சியில் ஒரு ஆசிரியை விட்ட கண்ணீர் ஒட்டு மொத்த ஆசிரியர்களும் விட்ட கண்ணீருக்குச் சமமானது என அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## சுமார் 20 இலட்ச ரூபாய் பெறுமதியான திருட்டு பொருள்களுடன் கணவனும் மனைவியும் கைது



20 இலட்ச ரூபாய் பெறுமதியான திருட்டு பொருள்களுடன் கணவனும் மனைவியும் பதுளை பொலிஸாரால் இன்று அதிகாலை (23) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 60 வயதுடைய கணவனும் அவரின் 57 வயதான மனைவியும் என பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளை- பஹலவத்தயில் உள்ள சந்தேகநபர்களின் வீட்டிலிருந்து, வீடுகளை உடைத்து திருடப்பட்ட பொருள்களான சமையல் எரிவாயு சிலிண்டர்கள், சமையல் எரிவாயு அடுப்புகள், மின்சார உபகரணங்கள், சங்கீத உபகரணங்கள், காலணிகள் உள்ளிட்ட பொருள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த தம்பதியினர் போதைக்கு அடிமையான இளைஞர் ஒருவரைப் பயன்படுத்தி குறித்த திருட்டுகளில் ஈடுபட்டு வந்துள்ளமை பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளதுடன், இதனுடன் தொடர்புடைய இளைஞரை கைதுசெய்வதற்கான விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

# தமிழ் ஒலை

மின்னஞ்சல்: aruvitamil812@gmail.com
வாட்ஸ் ஆப் இலக்கம்: 0094 768 320 733

## பாதி விதவைகளும் பதில் சொல்ல திராணியற்றவர்களும்!

**நேற்றைய தினம்** பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை வீட்டுக்கு வெளியே வருமாறு கூச்சலிட்டு அரசாங்கத்துக்கு எதிராக திரண்ட அரசியல் கட்சியொன்றின் மகளிர் அணியினர் அடங்கிப்போயிருந்த அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களை மீண்டும் அவிழ்த்து விட்டிருக்கின்றனர். இந்தப் பெண்களின் அணிதிரள்வும் அரசை வீட்டுக்கனுப்பும் ஓர்மமும் கடந்த காலங்களில் மூவினப் பெண்களும் எதிர்கொண்ட சவால்களுக்கு விடைதேடுவதாக ஏன் இருக்கவில்லை? என்ற வினா மேலெழுவதை இந்த இடத்தில் தவிர்க்க முடியவில்லை. இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் முன்னிலை வகித்த ஹிருணிகாவை அவமதிக்கும்வகையில் சமூக ஊடகங்களில் பதிவேற்றப் பட்ட புகைப்படங்கள் இலங்கைப் பெண்கள் போராடுவதற்கு உள்ள களங்களை கட்டியம் கூறுவதாய் உள்ளன.

இலங்கையை பொறுத்தவரையில் விதவை அரசியலில் பெண்கள் காலடியெடுத்து வைக்கும் சந்தர்ப்பங்கள் இருந்தாலும் காலத்துக்குகாலம் விதவைப்பெண்களின் வாழ்வியலில் மாற்றங்கள் எதுவும் இல்லை. வடகிழக்கில் 89ஆயிரத்துக்கும் மேற்பட்ட போர்விதவைகள் உள்ளனர் இதில் கிழக்குமாகாணம் சுமார் 50ஆயிரம் விதவைகளை கொண்டுள்ளதாக கிழக்குமாகாண சபையின் தரவுகள் தெரிவிக்கின்றன.

தென்பகுதியில் போர்விதவைகள் நிறுவனமயமாக்கப்பட்ட முறையில் செயற்படுகையில் வடகிழக்கின் போர்விதவைகளினதும் காணாமல் ஆக்கப்பட்டோரின் மனைவியரான பாதிவிதவைகளும் எதிர்கொள்ளும் பாலியல் சுரண்டல்களும் வாழ்வியல் நெருக்கடிகளும் சொல்லி மாளாதவை. பாதி விதவைகளுக்கு பதில் சொல்ல வேண்டியவர்கள் அதனை சொல்வதாயில்லை . இன்று சர்வதேச கைம்பெண்கள் தினமாகும்.

**கைம்பெண்களை கொண்டாடாவிட்டாலும் எமது கொண்டாட்டங்களில் சகமனுஷியாய்மதிப்போம்.**

நன்றி: அத



ஜூலை 9....

# காத்து காத்து கண்கள் பூத்திருக்கும் காலிமுகத்திடல்!

பவித்திரா

**ஜனாதிபதிக்கு** எதிராக ‘கோட்டா கோ கம’ வில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் 75 நாட்களைக் கடந்திருக்கும் நிலையில், அதனை இரண்டாவது கட்டத்துக்குக் கொண்டு சென்றிருப்பதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்திருக்கின்றார்கள். ஜனாதிபதி செயலகத்தின் முன்பக்க வாயிலை மட்டுமே அடைத்து போராட்டத்தை நடத்திக்கொண்டிருந்த இளைஞர்கள் கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்தின் ஏனைய வாயில்களையும் மூடினார்கள். அன்றைய தினம் ஜனாதிபதியின் %3 ஆவது பிறந்த தினமாக இருந்தமையாய் அதற்கு முதல்நாள் நள்ளிரவு 12.00 மணிக்கு இந்த வாயில்களையும் மூடிய போராட்டக்காரர்கள் ஜனாதிபதிக்கு இதுதான் நமது பிறந்தநாள் பரிசு எனவும் அறிவித்தார்கள். இதன்மூலமாக தமது போராட்டத்தை அடுத்த கட்டத்துக்குத் தீவிரப்படுத்த அவர்கள் முயன்றுள்ளார்கள்.

இலங்கையின் வரலாற்றில் இடம் பெறும் நீண்டகாலப் போராட்டமாக இது இருந்தாலும் இதில் ஒரு தொய்வு ஏற்பட்டிருப்பதை அண்மைக்காலத்தில் அவதானிக்க முடிகின்றது. பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ச பதவியைத் துறந்து அலரி மாளிகையிலிருந்து தப்பிச்சென்று சில நாட்களுக்கு தலைமறைவாகியிருப்பதற்குக்கூட இந்தப் போராட்டம் காரணமாக இருந்தது. பசில் ராஜபக்சவும் பதவிகளைத் துறந்து வெளியேறிவிட்டார். ஆனால், இப்போது ராஜபக்சக்கள் மீண்டு[ம்] வருவதற்கான ஒரு வெளி திறக்கப்பட்டிருப்பதாகவே தெரிகின்றது. மகிந்த, நாமல் போன்றவர்கள் பாராளுமன்றக் கூட்டத் தொடர்களுக்கு வருகின்றார்கள். பொது நிகழ்வுகள் பலவற்றிலும் கலந்துகொள்கின்றர்கள்.

இதனைவிட, ஜனாதிபதிக்கு இருக்கும் நிறைவேற்று அதிகாரங்களை 21 ஆவது திருத்தத்தின் மூலமாக வெட்டிக்குறைப்பதற்கு மே – 9 காலப்பகுதியில் இணக்கம் தெரிவித்த கோட்டாபய ராஜபக்ச அந்த நிலைப்பாட்டை இப்போது மாற்றிக் கொண்டுவிட்டார். தோல்வியடைந்த ஜனாதிபதியாக தான் வீடுசெல்லப்போவதில்லை என்பதை மட்டும் அவர் சொல்லவில்லை. அதிகாரங்கள் இல்லாத ஜனாதிபதியாக தான் இருக்கப்போவதில்லை என்பதையும் அவர் அமெரிக்க ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் உறுதிபடக்கூறியிருக்கின்றார். அடுத்த இரண்டரை வருடங்களுக்குத் தான் பதவியிலிருப்பேன் என்பதையும் அவர் பகிரங்கமாகக்கூறியிருக்கின்றார்.

மே–9 ஆம் திகதிய கலவரங்களின் பின்னர் பதுங்கியிருந்த மொட்டு உறுப்பினர்களும் பாராளுமன்றத்துக்கு வந்து அரசியலமைப்பைத் திருத்துவதானால், பெரும்பான்மையாகவுள்ள தமது ஆதரவு அவசியம் என்பதையும் உணர்த்திக்கொண்டிருக்கின்றார்கள். மொட்டு பாராளுமன்றப் பெரும்பான்மையைக்கொண்டிருக்கும் நிலையில் அவர்கள் விரும்பாத அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றைச் செய்ய முடியாது என்ற நிலையில், அவர்களுடைய தேவைக்கு ஏற்ப 21 மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பிரதமராகப் பதவியேற்க முன்னர் இவை தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி கொடுத்ததாகச் சொல்லப்படும்



வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளது. முக்கியமாக ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைக் குறைப்பது குறித்த வாக்குறுதி.

### ரணிலின் பிரவேசம்

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுக்கொண்டமைதான் இவை அனைத்துக்கும் காரணம் என விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றது. கோட்டா கோ கம போராட்டம் தொய்வடைந்தமைக்கும் ரணில்தான் காரணம் என ஒரு தரப்பினர் சொல்லிக் கொள்கின்றார்கள். ராஜபக்சக்களைப் பாதுகாக்கும் வகையில் ரணில் செயற்படுவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் குற்றச்சாட்டை முன்வைக்கின்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணி ஹிருணிகா பிரேமச்சந்திர தலைமையில் நேற்று புன்கிழமை ரணிலின் இல்லத்தின் முன்பாக போராட்டத்தை நடத்தியமைக்கும் அதுதான் காரணம். ரணிலுக்கு எதிராகவும் போராட்டம் நடத்த வேண்டிய அரசியல் தேவை ஐக்கிய மக்கள் சக்திக்கு இருக்கின்றது என்பதும் புரிந்துகொள்ளப்பட வேண்டிய ஒன்றுதான்.

ஆனால், கோட்டா கோ கம போராட்டம் தொய்வடைந்தமைக்கு ரணில் பிரதமராக பதவியேற்றமை மட்டும் காரணமல்ல. இந்தப் போராட்டத்தை எந்த இலக்கை நோக்கி நகர்த்துவது என்பதில் கூட போராட்டக்காரர்கள் தெளிவாக இல்லை என்ற விமர்சனம் ஒன்றும் முன்வைக்கப்படுகின்றது. இந்தப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது காணப்பட்ட மக்களின் உணர்வு கொஞ்சம் கொஞ்சமாக குறைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. போராட்டத்தை ஆரம்பித்தவர்கள் – அதனை நடத்திக்கொண்டிருப்பவர்கள் மத்தியில் உருவாகியிருக்கும் வேறுபாடுகள் இதற்குக் காரணமாக இருக்கின்றது. மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது என்பது உண்மைதான். ஆனால், இந்தப் போராட்டத்தை எவ்வாறு முன்னெடுத்துச்செல்வது, அரசியல் கட்சிகளுடன் எவ்வாறான உறவுகளைப் பேணுவது, அவர்களுடைய ஆதரவைப் பெற்றுக் கொள்வதா போன்ற விடயங்களில் போராட்டக்காரர்களிடையே தெளிவான ஒரு அணுகுமுறை இல்லை. இதனைவிட இந்தப் போராட்டத்தினால் கிடைக்கக்கூடிய பலன் என்ன என்பதும் இன்றைய தொய்வு நிலைக்கு காரணமாக இருக்கின்றது.

இதனை அரசாங்கமும் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளப் பார்க்கின்றது. உதாரணமாக கடந்த திங்கட்கிழமை போராட்டம் விரிவுபடுத்தப்பட்டபோது நிதி அமைச்சு, திறைசேரி என்பனவற்றின் கதவுகளும் அடைக்கப்பட்டன. ஜனாதிபதி செயலகத்தின் பின்பக்கத்தில்தான் அவை உள்ளன. இதன் காரணமாக சர்வதேச நாணய நிதியத்துடன் பிரதமர் அன்று காலை ஆரம்பித்த பேச்சுவார்த்தைக்கு திறைசேரிச்செயலாளரால் உரிய நேரத்துக்குச் செல்லமுடியவில்லை. இன்றைய நிலையில் சர்வதேச நாணய நிதியம் தான் இலங்கையை கடன்பொறியிலிருந்து காப்பாற்றப்போகும் மீட்பராகக் கருதப்படுகின்றது. அவர்களுடனான சந்திப்புக்கு திறைசேரிச்

மிகுதி 17 ஆம் பக்கத்தில்...

# மண்டபம் அருகே இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 700 கிலோ கடலட்டை மீட்பு



மண்டபம் அருகே இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த %00 கிலோ கடலட்டை இன்று வியாழக்கிழமை (23) மாலை வனத்துறை அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

மண்டபம் அடுத்த வேதாளை கடற்கரை பகுதியில் இலங்கைக்கு கடத்துவதற்காக கடலட்டை பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக வனத்துறை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து அப்பகுதிக்கு விரைந்து சென்ற வனத்துறையினர் இலங்கைக்கு கடத்துவதற்காக பதப்படுத்தப்பட்ட 700 கிலோ எடை கொண்ட கடல் அட்டையை கைப்பற்றியுள்ளனர்.

மேலும் கைப்பற்றப்பட்ட கடல் அட்டையின் மதிப்பு சர்வதேச அளவில் 35 லட்ச ரூபாய் இருக்கும் என வனத்துறையினர் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகளை வனத்துறை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# சீன விமானங்களை எச்சரிக்க ஜெட் விமானங்களை அனுப்பியது தாய்வான்



நாட்டின் வான் பாதுகாப்பு மண்டலத்திற்குள் நுழைந்த 29 சீன விமானங்களை எச்சரிக்க தாம் நடவடிக்கை எடுத்ததாக தாய்வான் அறிவித்துள்ளது.

செவ்வாயன்று சீனப் போர் விமானங்களின் ஊடுருவல் தைபே மற்றும் பெய்ஜிங்கிற்கு இடையிலான பதட்டங்களை மேலும் அதிகரித்துள்ளது.

கடந்த மாதத்தின் பிற்பகுதியிலிருந்து சீனாவின் மிகப்பெரிய வான் பாதுகாப்பு மண்டல மீறலை இந்த ஊடுருவல் குறிக்கிறது.

அதன்படி நேற்று சீனாவின் 17 போர் விமானங்கள், ஆறு ஏ-6 குண்டுவீச்சு விமானங்களும் நீர்மூழ்கி எதிர்ப்பு, வான்வழி எரிபொருள் நிரப்பும் விமானங்களும் ஊடுருவியதாக தாய்வான் அறிவித்துள்ளது.

சீன விமானங்களை எச்சரிக்க தமது போர்விமானங்களைவான் பரப்பில் பறக்கவிட்டதாகவும் தாய்வான் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அதே நேரத்தில் ஏவுகணை அமைப்புகள் கண்காணிக்க பயன்படுத்தப்பட்டன என்றும் தாய்வான் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

# தென் சீனாவில் 60 ஆண்டுகளில் இல்லாத கனமழை, வெள்ளத்தால் 5 இலட்சம் பேர் பாதிப்பு





சீனாவில் தென் பிராந்தியங்களில் கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கொட்டித் தீர்த்து வரும் கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு உள்ளிட்ட அனர்த்தங்களில் சிக்கி கிட்டத்தட்ட 5 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் 177,600 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். 1,729 வீடுகள் அழிந்தன. 27.13 ஹெக்டேர் பயிர்கள் சேதம் அடைந்துள்ளன. சுமார் 250 மில்லியன் டொலருக்கு அதிகமான சொத்து இழப்புகளை ஏற்பட்டுள்ளதாக குவாங்டாங்கின் அவசரகால முகாமைத்து துறை நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளது.

குவாங்டாங் மாகாணத்தில் பெய்த மழையினால் கடுமையான நிலச்சரிவுகள் ஏற்பட்டன. வீதிகளை மேவி வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்கிறது என சீன அரச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தென்மேற்கு குயிசு (Guizhou) மாகாணத்தில் ஆறுகள் பெருக்கெடுத்து ஓடுவதால் வீதிகள் அழிந்துள்ளன. கார்கள் மற்றும் வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுவதை சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள வீடியோக்களில் காண முடிகிறது.

குவாங்சி, குவாங்டாங் மற்றும் புஜியான் ஆகிய இடங்களில் 1961 ஆம் ஆண்டுக்குப் பிறகு அதிகபட்ச மழைப்பொழிவு பதிவாகியுள்ளது என்று உள்ளூர் வானிலை மையங்கள் தெரிவித்தன.

இந்தப் பகுதிகளில் மே 1 முதல் ஜூன் 15 முதல் 46 நாட்களில் சராசரியாக 621 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளது. இது 2021 ஆம் ஆண்டு முழுவதும் நாடு தழுவிய சராசரியான பெய்த மழைவீழ்ச்சியில் கிட்டத்தட்ட 907 க்கும் அதிகமாகும். 2021 இல் மொத்தம் 672.1 மில்லிமீட்டர் மழை வீழ்ச்சி பதிவானது.

தெற்கு மாகாணங்களான குயிசு (எதடித்டணித), ஜியாங்சி (Jiangxi), அன்ஹுய் (Anhui) , ஜெஜியாங் (Zhejiang) மற்றும் குவாங்சி (Guangxi) ஆகிய பகுதிகளில் அடுத்துவரும் நாட்களுக்கு கனமழை நீடிக்கும் என்றும், பின்னர் வடக்கு நோக்கி நகரும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

# நாடாளுமன்றத்தைக் கலைக்க இஸ்ரேல் பிரதமர் தீர்மானம்!



இஸ்ரேல் நாடாளுமன்றத்தைக் கலைக்க அடுத்த வாரம் சட்டமூலம் தாக்கல் செய்யப்படும் என்று பிரதமர் நாஃப்டாலி பென்னட் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலில் வலதுசாரி, இடதுசாரி, அரபு கட்சி என வெவ்வேறு சித்தாந்தங்களைக் கொண்ட கட்சிகள் கூட்டணி அமைத்து ஆட்சிபுரிந்து வருகின்ற நிலையில், கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைக்கு மத்தியில் நாஃப்டாலி பென்னட், வெளியுறவு அமைச்சர் யாயிர் லாபிட் ஆகியோர் கூட்டாக இணைந்து நதிங்கட்கிழமை இந்த அறிவிப்பை வெளியிட்டனர்.

இஸ்ரேல் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான சட்டமூலம் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டால், அந்நாட்டில் 3 ஆண்டுகளில் 5ஆவது முறையாக பொதுத் தேர்தல் நடைபெறும்.

நாஃப்டாலி பென்னட் யாமீன் கட்சியைச் சேர்ந்தவர். யாயிர் லாபிட், யெஷ் அடிட் கட்சியைச் சேர்ந்தவர். தேர்தல் நடைபெறும்பட்சத்தில் இருவரும் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின்படி, தேர்தல் வரை யாயிர் லாபிட் இஸ்ரேலின் இடைக்காலப் பிரதமராகப் பதவி வகிப்பார். அதே வேளையில், நாஃப்டாலி பென்னட் அரசியலில் இருந்து முழுமையாக விலக உள்ளதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னதாக, இஸ்ரேல் நாடாளுமன்றத்தைக் கலைக்க முன்னாள் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான லிகுட் கட்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை சட்டமூலம் தாக்கல் செய்தது. அந்த சட்டமூலம் மீதான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற உள்ளது.

120 இடங்களைக் கொண்ட இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் நாஃப்டாலி பென்னட் தலைமையிலான அரசு சிறுபான்மை அரசாக உள்ள நிலையில், குழப்பத்தை சரிசெய்து கூட்டணியை ஸ்திரப்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அதற்கு பலன் கிடைக்கவில்லை.

# உலக புகழ்பெற்ற ஜம்போ மிதக்கும் உணவகம் கடலில் மூழ்கியது!



உலக புகழ்பெற்ற ஹொங் கொங் சுற்றுலாத்தலமாக விளங்கிய 'ஜம்போ' மிதக்கும் உணவகம், தென் சீனக் கடலில் மூழ்கியதாக அதன் தாய் நிறுவனம் தெரிவித்துள்ளது.

பாராசெல் தீவுகளுக்கு அருகில் 'ஜம்போ' மிதக்கும் உணவகம், ஞாயிற்றுக்கிழமை பாதகமான நிலைமைகளை எதிர்கொண்ட பிறகு மூழ்கியதாக அபெர்டீன் ரெஸ்டாரன்ட் எண்டர்பிரைசஸ் ஒரு அறிக்கையில் அறிவித்தது.

படகு 1,000 மீட்டருக்கும் (3,280 அடி) அடியில் மூழ்கியதால் மீட்புப் பணி மிகவும் கடினமானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அபெர்டீன் ரெஸ்டாரன்ட் எண்டர்பிரைசஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இந்த விபத்தால் மிகவும் வருத்தமடைந்துள்ளோம். மேலும் விபரங்களை சேகரிக்கும் முயற்சி செய்கின்றோம். பணியாளர்கள் யாரும் காயமடையவில்லை' என தெரிவித்துள்ளது.

ஹொங்கொங்கின் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட வரலாற்று சின்னங்களில் ஒன்றான 'ஜம்போ' மிதக்கும் உணவகம், மூழ்கியதையடுத்து இதன் வாடிக்கையாளர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பிரியாவிடை செய்திகளைப் பகிர்ந்து வருகின்றனர்.

பயணத்திற்கு முன், மிதக்கும் உணவகத்தை ஆய்வு செய்யவும், கப்பலில் ஹோர்டிங்குகளை நிறுவவும் கடல் பொறியியலாளர்கள் பணியமர்த்தப்பட்டதாகவும், சம்பந்தப்பட்ட அனைத்து ஒப்புதல்களும் பெறப்பட்டுள்ளதாகவும் நிறுவனம் கூறியுள்ளது.

கிட்டத்தட்ட ஒரு தசாப்த கால நிதிச் சிக்கல்களுக்குப் பிறகு, கொவிட்-19 தொற்றுநோயால் கடந்த 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் உணவகம் மூடப்பட்டது.

ஆபரேட்டர் மெல்கோ இன்டர்நேஷனல் டெவலப்மென்ட், கடந்த மாதம் வணிகம் 2013ஆம் ஆண்டு முதல் லாபகரமாக இல்லை என்றும், ஒட்டுமொத்த இழப்புகள் 100 மில்லியன் ஹொங்கொங் டொலர்களை (12.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) தாண்டிவிட்டதாகவும் கூறியது.

ஒவ்வொரு ஆண்டும் பராமரிப்புக் கட்டணத்தில் மில்லியன் கணக்கில் செலவாகிறது. மேலும் ஒரு டசன் வணிகங்கள் மற்றும் நிறுவனங்கள் எந்தக் கட்டணமும் இன்றி அதை எடுத்துக்கொள்வதற்கான அழைப்பை நிராகரித்தன என்றும் மெல்கோ மேலும் கூறியது.

1976ஆம் ஆண்டு மறைந்த கேசினோ அதிபர் ஸ்டான்லி ஹோவால் 'ஜம்போ' மிதக்கும் உணவகம், திறக்கப்பட்டது. சீன ஏகாதிபத்திய அரண்மனை போல வடிவமைக்கப்பட்டு, ஒரு காலத்தில் பார்க்க வேண்டிய அடையாளமாக கருதப்பட்ட இந்த உணவகம், ராணி எலிசபெத் முதல் டாம் குரூஸ் வரை பார்வையாளர்களை ஈர்த்தது.




# மரவள்ளிக்கிழங்கின் மவுசும்... மலேசிய இனிப்பும்!







பிரமிளா நாகேஸ்வரராஜா

**உலகில்** உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் பொதுவான தேவை ‘உணவு’ ஆனால் அந்த உணவு பொருளை உற்பத்தி செய்வதில் தொடங்கி அவை ஒருவரது வயிற்றுக்குள் செல்வது வரையிலான செயற்பாடுகள் மிக நீண்டவை. நம் உடலும் உள்ளமும் உறுதியாக இருந்தால் எதையும் எதிர் கொள்ளலாம். அதற்கு, அனைத்து உயிர்களும் ஆரோக்கியமாக வாழ அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும். பசியால் யாரும் வாடக்கூடாது.

தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் எனப் பாடினார் பாரதி. ஆனால் இன்றோ விண்ணை முட்டும் விலைவாசி உயர்வால் ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவாவது

கிடைக்காதா? என தவிப்போரும், கோயில் வாசலிலும், தெருக்களிலும் யாசகம் கேட்பவர்களால் நாட்டு மக்களின் உணவுத் தேவையும் பசியும் கேள்விக்கு உள்ளாகுகின்றன. சரிவிகித உணவை அன்றாடம் மிகக் குறைவானவர்களே உட்கொள்கிறார்கள். பலரும் நல்ல உணவின்றி தவிக்கிறார்கள். இப்படி 'பரமபத' விளையாட்டுப் போல எண்ணற்ற நெளிவு, சுழிவுகளை கொண்டதாக ஒவ்வொருவரின் வாழ்க்கைச் சூழலும் ஆரோக்கியமும் இருக்கின்றது.

உடல் பலமுடன் இருக்க விரும்பினால், முதலில் மனதை வலிமையாக்குங்கள். மன தைரியத்தை இழந்து விட்டால், மனிதன் எல்லாவற்றையும் இழந்தவனாகிறான்.

## பஞ்சம் என்ற எச்சரிக்கை மட்டும் சோறு போடாது!

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியை சமாளிப்பது எப்படி? என்பதே இப்போதுள்ள மில்லியன் டொலர் கேள்வியாகும்.பொது மக்களைப் பொறுத்தவரையில் கற்சட்டியில் இருந்து அடுப்பில் விழுந்த நிலை. உணவு பற்றாக்குறை வரும் என அதிகாரத்தரப்பினர் எச்சரிக்கை விடுப்பதுடன் கடமை முடிந்து விடுமா? பஞ்சம் வருகிறது என்று மக்களை எச்சரிக்க அரசாங்கம் தேவையில்லை, அது மக்களுக்கே தெரியும். அதிலிருந்து மக்களை காப்பாற்ற அரசாங்கம் என்ன செய்யப் போகிறது? அது தான் கேள்வி. மக்களை பட்டினி போடாமல் காப்பதே ஒரு அரசாங்கத்தின் தலையாய கடமை. பஞ்சத்தை யாரும் விரும்புவதில்லை ஆனால் வந்துவிட்டால், அதை சமாளித்தே ஆக வேண்டும். தற்போது இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி இலங்கைக்கு மாத்திரம் உரியதல்ல. இவ்வாறான நெருக்கடியை உலகில் எல்லா நாடுகளுமே எதிர் கொண்டுள்ளன. அவ்வாறான நெருக்கடி ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் அரசாங்கம் முன் கூட்டியே முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு பங்களிப்பதும்,

தற்போதைய சூழ்நிலைக்கு ஒத்துழைப்பு நல்குவதும் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

அதுவே இன்றைய தேவையாகும்.

## உணவு நெருக்கடிக்கு தீர்வாக, அரிசிக்கு பதிலாக மரவள்ளி !

மரவள்ளிக் கிழங்கிற்கு உள் நாட்டுப்பெயர்கள் ‘குச்சி’க்கிழங்கு, ‘குச்சி’ வள்ளிக்கிழங்கு. எளிதில் பசியை போக்கும் சக்தி மிகுந்த உணவுப் பொருள்களில் ஒன்று.

இதனை பண்டைய காலங்களில் நம் முன்னோர்கள் தினசரி உணவாக சாப்பிட்டு உயிர் வாழ்ந்தனர். வெப்ப வலய, துணை வெப்பவலயப் பகுதிகளில் ஆண்டுப் பயிராக பயிரிடப்படுகிறது.

மரவள்ளியிலிருந்து உணவுக்கு பயன்படக் கூடிய கிழங்கு பெறப்படுகிறது. இது மாவுப் பொருளை தரும் ஓர் முக்கிய உணவுப் பண்டமாகும்.மனிதர்களின் உணவுக்கான மாப்பொருள் சத்தை தருவதில் உலகில் மூன்றாவது பெரிய மூலம் மரவள்ளியாகும். மனிதர் மற்றும் விலங்குகளுக்கு உணவுப் பொருளாகவும் பல்வேறு தொழில் துறைகளில் இது ஒரு மூலப்

பொருளாகவும் பயன்படுகிறது. மரள்ளிக்கிழங்கில் ‘சயனோசெனிக்’ குளுக்கோசைட்டு எனப்படும் நச்சுப் பொருள் காணப்படுகிறது. இப்பொருள் இருக்கும் அளவைப் பொறுத்து மரவள்ளிக்கிழங்கு ‘இனிப்பு’ மரவள்ளி, ‘கசப்பு’ மரவள்ளி என இரண்டு வகைகளாக உள்ளது.

மண்,வளம் போன்ற எவ்விதமான வேளாண் சூழலையும் தாங்கி வளரக் கூடிய பயிராதலால் பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்களின் குறிப்பாக ஆபிரிக்கா,அமெரிக்கா மற்றும் ஆசியாவில் உள்ள வளரும் நாடுகளில் ஒரு



முதன்மை பயிராக மரவள்ளிக்கிழங்கு விளங்குகிறது.

தென் அமெரிக்காவையும், மேற்கு ஆபிரிக்காவையும் தாயகமாக கொண்டது இச் செடி. உலகம் முழுவதும் ஒவ்வொரு நாளும் சுமார் 500 மில்லியன் மக்கள் மரவள்ளிக் கிழங்கில் இருந்து தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களை பயன்படுத்துகின்றனர்.

## மரவள்ளிக்கிழங்கின் மருத்துவ பயன்கள்.

1 சிவப்பணுக்கள் உற்பத்தியை அதிகப்படுத்துகிறது.
2 செரிமானத்தை கூட்டுகிறது.
3 கர்ப்பிணிகள் உண்டு வர குழந்தை ஊனமில்லாமல் பிறக்கும் .
4 எலும்பு சம்பந்தமான நோய்கள் குணமாகும்.
5 ஞாபக சக்தி கூடும்.
6 வயிற்றுப்புண் குணமாகும்.
7 உடல் எடையினை அதிகரிக்கும்.

உங்களுக்கு மரவள்ளிக்கிழங்கு பிடிக்குமா? ஊட்டச்சத்து மிக்க மரவள்ளிக்கிழங்கில் ஒரு வித்தியாசமான இனிப்ப நீங்களும் செய்து சுவை பாருங்கள்.

## மரவள்ளிக்கிழங்கு இனிப்பு

### தேவையானவை

**1 மரவள்ளிக்கிழங்கு - அரைக்கிலோ**
**2 சீனி - அரை கப்**
**3 தேங்காய் துருவல் - அரை கப்**
**4 ஏலக்காய் பொடி - அரை ஸ்பூன்**
**5 உப்பு - ஒரு ஸ்பூன்**
**6 அரிசி மா - ஒரு கப்**
**7 கோதுமை மா - அரை கப்**
**8 மஞ்சள் தூள் - கால் ஸ்பூன்**
**9 மேலதிகமாக சீனி - ஒரு ஸ்பூன்**

### செய்முறை

முதலில் மரவள்ளிக்கிழங்கை தோல் நீக்கி விட்டு சிறு துண்டுகளாக வெட்டி தண்ணீரில் கழுவி ஒரு பாத்திரத்தில் போட்டு கால் ஸ்பூன் உப்பு மற்றும் தண்ணீர் விட்டு 20 நிமிடங்கள் அவித்து எடுக்கவும். ஒரு மத்தோ,சிறிய உலக்கையாலோ கொண்டு நன்றாக மசித்து அதனுடன் உப்பு , ஏலக்காய் தூள், தேங்காய் துருவல், சீனி சேர்த்து பிசைந்து சிறிய அளவிலான உருண்டைகள் பிடிக்கவும். ஒரு சிறிய கிண்ணத்தில் அரிசிமா,கோதுமை மா, சீனி, மஞ்சள் தூள் இவற்றை தண்ணீர் விட்டு கெட்டியாக கலந்தெடுத்து, மரவள்ளி உருண்டைகளை இக்கலவையில் முக்கி எடுத்து சூடான எண்ணெயில் போட்டு பொரித்து எடுக்கவும்.

இந்த இனிப்பு மலேசியாவில் மிகவும் பிரபலமானது. இதனை ஒரு முறை சுவைத்தால், மீண்டும் மீண்டும் சுவைக்கத் தோன்றும்.




# போதை காட்டும் பாதை பாதாளம்!

புஸ்பராசா
கோபிகா



**இந்த** மிலேனிய யுகமானது அடுப்பங்கரை தொடக்கம் அண்டவெளி வரை அசுர வேகத்தில் வளர்ச்சியடைந்து செல்கிறது. தொழில்நுட்ப வசதி சிகரத்தை தொட்ட இந்த நிலையில்,அதற்கு எந்த விதத்திலும் நானும் குறைந்தவன் அல்ல என்ற பீதியில் போதைப் பொருள் பாவனையும் தலைதூக்கிவிட்டது. போதைப் பொருள் பாவனையின் உச்சகட்ட எதிர் விளைவு மரணம் என்று தெரிந்தும் கூட அதிலிருந்து விலகி இருக்க யாரும் விரும்பவில்லை. போதைக்கு அடிமையாகி மதி மயங்கி நிற்கும் மானிடர்கள் தம் வாழ்க்கையை தாமே மண்ணாக்கி வருவதை உணர மறுப்பதன் மாயம்தான் புரியவில்லை. இவ்வாறு போதை பாவனையால் அவர்கள் மட்டுமா சீரழிகிறார்கள்? இல்லை! அவர்களை சார்ந்துள்ள அனைவரது வாழ்க்கையும் வீணாகிப்போகின்றது என்பதே நிதர்சனம்.

போதைப் பொருட்கள் என பார்க்கும் போது அதற்குள்ளே மதுபானம், புகையிலை, அபின், ஹெராயின், கஞ்சா, பான் மசாலா என எத்தனை பேர் கொண்டு ஒவ்வொன்றும் ஒவ்வொரு வித அவதாரமெடுத்து காணப்படுகின்றன. உலகளாவிய பீதியில் ஒரு கணக்கெடுப்பின்படி 14- 65 வயதுக்கிடைப்பட்ட 243 மில்லியன் மக்கள் போதைக்கு அடிமையானவர்கள் என அறியப்பட்டுள்ளது.அதிலும் குறிப்பாக 80 சத வீதமானவர்கள் ஆண்களாகவும், 20 சதவீதமானவர்கள் பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு போதைக்கு அடிமையானவர்களுக்கு நாளடைவில் மூச்சுத்திணறல், சளி, இருமல் போன்ற பிரச்சனைகள் ஏற்படுவதோடு உணவுக் குழாயிலும், கணையத்தில் பாதிப்பு ஏற்படுகின்றது. அதுமட்டுமன்றி வயிற்றில் புண், எடை குறைதல், உடல் சோர்வு போன்ற பிரச்சனைகள் ஏற்படுவதோடு பல உளவியல் பாதிப்புகள் ஏற்படவே செய்கின்றன. அதாவது மூளையில் ஏற்படும் பாதிப்புகளால் தனக்குத்தானே பேசிக்கொள்ளுதல், மனச்சோர்வு, சிந்தனைத் திறன் குறைவடைதல், ஞாபகமறதி, சமூக அந்தஸ்து குறைதல் போன்ற பல எதிர் வினைகள் ஏற்படுகின்றன. இவற்றால் ஒருவரது வாழ்க்கை முழுமையாக பாதிக்கப்படுகிறது.

தற்காலத்தில் இந்த போதைப்பொருள் பாவனையானது மாணவர்கள் மத்தியிலும் அதிகளவில் பரவத் தொடங்கிவிட்டது. 'நாட்டின் முதுகெலும்புகள்' என சொல்லப்படும் மாணவர்கள் மத்தியில் இந்த பாவனையானது தலைதூக்கின்,நாட்டின் எதிர்காலம் தலைகுனிவில் தானே முடியும். வீட்டில் பெற்றோர்கள் எத்தனை கஷ்டங்களை தாண்டி தமது பிள்ளைகளை எப்படியாவது நல்வழிப்படுத்திவிட வேண்டும். என்ற எண்ணத்தில் கல்வி கற்பிக்கிறார்கள். ஆனால் பிள்ளைகள் தமது எதிர்காலத்தை பற்றியும், பெற்றோர் தம் மீது கொண்ட நம்பிக்கை என்றவாறாக எது பற்றியும் சிந்திக்காது தமது வாழ்க்கைப் பாதையை பாதாளம் நோக்கி நகர்த்தி வருகின்றனர். அது மட்டுமா அவர்கள் தமது குடும்ப மரியாதையும் சேர்த்துத் தான் புதைத்துவருகிறார்கள்.

குடும்பஸ்தர் ஒருவர் போதைக்கு அடிமையானவர் எனின், அவர் தன்னை நம்பி வந்த மனைவியின் வாழ்க்கையுடன், தனது குழந்தையின் எதிர்காலத்தையும் தான் பாழாக்குகின்றார் என்று அர்த்தம்.



> போதையானது தனக்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீண்டெழவிடாது. சிலர் தாங்கள் உழைக்கும் முழுப்பணத்தை குடும்பத்திற்கு கொடுக்காது இதற்காகவே செலவளிப்பார்கள். இன்னும் சிலர் தமது தாய்,தந்தை சேர்த்துவைத்த சொத்து முழுவதையும் அழித்து விடுவார்கள். இவற்றுக்கு மேலதிகமாக இன்னும் சிலர் வேலைக்கு போகாமல், ஊரார் சொத்தை கொள்ளையடித்து அதில் தமக்கு தேவையான போதைப்பொருளை வாங்கிக் கொள்கின்றார்கள். இவ்வாறு ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு ரகம். ஆனால் இந்தப் போதைப்பாவனையால் அனைவரது வாழ்க்கையும் பாழாகும் என்பதே இறுதி முடிவு.

உண்மையில் வாழ்க்கையின் நிதர்சனம் அறிந்து, பக்குவமடைந்த ஒருவர் போதைக்கு எந்தவகையிலும் அடிமையாகமாட்டார். மாறாக சமூகத்தில் பொறுப்பற்று திரிபவர்களுக்கே இவற்றின் மீது அதிக நாட்டம் இருக்கும். இந்நிலையில் சீரான வேலையும் இல்லாது, அவ்வாறு வேலைக்கு போனாலும் அந்த பணத்தில் போதை பொருட்களை வாங்கினால் வீட்டில் உள்ள மனைவி பிள்ளைகளை யார் பார்ப்பது? அவர்களது தேவைகளை எவ்வாறு தீர்த்து வைப்பது? இவ்வாறான குடும்பங்களால் தான் சமூகம் சீரழிந்து வருகின்றது.

அதுமட்டுமா? இந்த போதைப்பொருள் பாவனையானது பணம் கொடுத்து மரணத்தை விலைக்கு வாங்குவதற்கு சமமாகும். பதினெட்டு, இருபது வயதுகளில் போதைப் பழக்கத்துக்கு அடிமையாவதால் உடல், உள பீதியில் பல நோய்கள் ஏற்பட்டு 35, 40 வயதுகளிலேயே அவர்களது வாழ்க்கையே முடிவடைந்து விடுகிறது.

மிகுதி 08 ஆம் பக்கத்தில்...




# போதை காட்டும் பாதை பாதாளம்!

**ஒருவரின் ஆளுமையை தீர்மானிப்பதில் உடல் தோற்றமும் முக்கிய காரணியாக விளங்குகின்றது என்று தான் கூற வேண்டும். ஒருவரது உடல்தோற்ற மானது அவர்களை அறியாமலே அவர்கள் மனதில் ஒருவித புத்துணர்வை, தன்னம்பிக்கையை ஏற்படுத்தவல்லது.**

அவர்கள் குடும்பத்துக்கு ஒரு பிள்ளையாக இருக்கலாம். திருமணமாகி மூன்று, நான்கு மாதங்கள் மட்டுமே ஆனவர்களாக இருக்கலாம். 6 மாத குழந்தைக்கு தந்தையாக இருக்கலாம். இவ்வாறாயின் அவர்களது மரணம் அவர்களை சார்ந்தவர்களை எந்தளவிற்கு பாதிப்படைய செய்திருக்கும் என்பது அனைவராலும் புரிந்துகொள்ளக் கூடியதொரு விடயமே ஆகும்.

அதுமாத்திரமன்றி தற்காலத்தில் அதிகளவில் இடம்பெறும் கொலை, களவு, கடத்தல், பாலியல் துஷ்பிரயோகம் போன்ற சமூக சீர்கேடுகள் அனைத்திற்கும் பிரதான காரணம் இந்த போதைப்பொருள் பாவனை தான் என்றால், அது மறுக்க முடியாத உண்மையாகும். போதைக்கு அடிமையானவர்களின் மனநிலையானது நல்லது, கெட்டது என எதையும் பகுத்தறிந்து புரிந்து கொள்ள முடியாத நிலையாகும். இந்நிலையில் அவர்கள் எதுபற்றியும் சிந்திக்காது, சிறுவர்களோ, முதியவர்களோ தமது தவறான சிந்தனைக்கு அவர்களை இரையாக்கிக்கொள்வார்கள். இன்றைய காலத்தில் உலகில் இவ்வாறான எத்தனையோ பல சம்பவங்கள் பதிவாகியமை அனைவரும் அறிந்த விடயமாகும்.

எவ்வளவுதான் வசதிபடைத்தவர்கள் ஆயினும் சமூகத்தில் தனித்து வாழ்ந்திட முடியாது தானே! ‘ஊரோடு ஒத்துவாழ்வதே வாழ்வு.’ அவ்வாறு இருக்கையில் சமூகத்தில் நன்மதிப்பு பெற்றிருப்பது மிகவும் அவசியமானதொன்றாகும். ஒரு குடும்பத்தில் போதைப்பழக்கமுடையவர் இருப்பின், அந்தக் குடும்பத்திற்கு சமூகத்தில் மரியாதை இருக்காது. தமது பிள்ளைகளும் அவர்களுடன் சேர்ந்தால் கெட்டுப்போய்விடுவார்கள். என்று அவர்களை சமூகத்திலிருந்து புறக்கணித்தே வைத்திருப்பார்கள்.


இந்த போதையானது தனக்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீண்டெழவிடாது.சிலர் தாங்கள் உழைக்கும் முழுப்பணத்தை குடும்பத்திற்கு கொடுக்காது இதற்காகவே செலவளிப்பார்கள். இன்னும் சில தமது தாய்,தந்தை சேர்த்துவைத்த சொத்து முழுவதையும் அழித்து விடுவார்கள். இவற்றுக்கு மேலதிகமாக இன்னும் சிலர் வேலைக்கு போகாமல், ஊரார் சொத்தை கொள்ளையடித்து அதில் தமக்கு தேவையான போதைப்பொருளை வாங்கிக் கொள்கின்றார்கள். இவ்வாறு ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு ரகம். ஆனால் இந்த போதைப் பாவனையால் அனைவரது வாழ்க்கையும் பாழாகும் என்பதே இறுதி முடிவு.

ஒருவரின் ஆளுமையை தீர்மானிப்பதில் உடல் தோற்றமும் முக்கிய காரணியாக விளங்குகின்றது என்று தான் கூற வேண்டும்.ஒருவரது உடல்தோற்றமானது அவர்களை அறியாமலே அவர்கள் மனதில் ஒரு வித புத்துணர்வை, தன்னம்பிக்கையை ஏற்படுத்தவல்லது. இந்த போதைப்பழக்கத்துக்கு உள்ளானவரின் உடலானது மெலிந்து, சோர்வடைந்து வயதானவர் போன்ற தோற்றத்தை கொடுக்கும். இதனால் அவர்களை அறியாமலே அவர்கள் மனதில் எதிர்மறை சிந்தனைகள் தோற்றம் பெற தொடங்கிவிடும்.

இவ்வாறாக போதைப்பாவனையால் எண்ணற்ற பாதக விளைவுகள் ஏற்படுகின்றன. இதுபற்றி எல்லாம் எத்தனை வழிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தினாலும் கூட, சமூகத்தில் மாற்றம் ஏற்படுவதாக தெரியவில்லை. மாறாக நாளுக்கு நாள் போதைப்பாவனை அதிகரித்த வண்ணமே இருக்கின்றது. ‘திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால், திருட்டை ஒழிக்க முடியாது.’ என்பார்கள். அதுபோலவே ஒவ்வொருத்தரும் தாமாக உணர்ந்து திருந்தும் வரை இதனை யாராலும் ஒழித்துவிடமுடியாது. போதை பாவனையானது எமக்கு மட்டுமன்றி எமது குடும்பம், சமூகம், நாடு என அனைத்தையும் பாதிக்குமளவிற்கு கொடூரமானது. அதிலிருந்து மீண்டு வெளியே வந்தால், நமக்கு அழகான வாழ்க்கை என்று காத்திருக்கும். என்பதை உணர்ந்தாலே போதும் அனைத்தும் மாறிவிடும்.‘மனம் உண்டானால் மார்க்கம் உண்டு.’ என்பார்கள். மன உறுதி கொண்டால், எதையும் மாற்றிவிடலாம். எந்த பழக்கத்திலிருந்தும் மீண்டுவிடலாம்.போதைப்பழக்கத்திலிருந்து மீண்டு புதுவாழ்வு வாழ்வோம்.

‘முயன்றால் முயலாதது என்று எதுவுமில்லை. போதையற்ற நாட்டை உருவாக்க, இன,மத,பேதமின்றி ஒன்றுபடுவோம்.’







# காற்று வாங்கப்போகும் மோட்டார் சுந்தரம்பிள்ளைகள்!

**"காப்புறுதி நிறுவனங்கள் துவிச்சக்கர வண்டிகளுக்கு புதிய காப்பீட்டு திட்டத்தை தற்போது அறிமுகப்படுத்தியுள்ளன. எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் தட்டுப்பாட்டால் தற்போது மிதிவண்டிகளுக்கான தேவை அதிகரித்து வரும் நிலையில், இரண்டு வருட காலத்திற்குள் வாங்கும் துவிச்சக்கரவண்டிகளுக்கு இந்த காப்பீடு திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. விபத்து ஏற்பட்டால் ரூ.ஒரு இலட்சமும், விபத்தில் சைக்கிள் முற்றாக சேதமடைந்தால், அந்த சைக்கிளின் முழு மதிப்பையும் காப்பீட்டு நிறுவனத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம். இலங்கை மக்கள் மோட்டார் வாகனங்களிலிருந்து மிதிவண்டிகளுக்கு மாறியதை சொல்லி சுவாரஷ்யமாக பயணிக்கிறது இந்தக்கட்டுரை"**

**பொருளாதார** நெருக்கடியினால் வாகனங்களுக்கான எரிபொருள் தட்டுப்பாட்டையடுத்து, மக்கள் மத்தியில் துவிச்சக்கர வண்டி செல்வாக்கு பெறத் தொடங்கியுள்ளது. நகர்ப்புறங்கள் மட்டுமன்றி, கிராமப்புறங்களிலும் இந்த 'போக்குவரத்துச் சாதன மாற்றம்' செல்வாக்கு செலுத்தி இருக்கின்றது.

நகர்ப்புறங்களில் புதிய துவிச்சக்கர வண்டிகளைப் பலரும் கொள்வனவு செய்து வருகின்றார்கள். ஆனை விலை குதிரை விலை என்று வர்ணிக்கும் அளவில் துவிச்சக்கர வண்டிகளின் விலையும் சாதாரண மக்கள் நினைத்துப் பார்க்க முடியாத அளவில் அதிகரித்திருக்கின்றது. முன்னர் 6 ஆயிரம், 7 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட துவிச்சக்கர வண்டிகள் இப்போது 44 தொடக்கம் 48 ஆயிரம் வரையில் வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்படுகின்றது. முன்னர் ஆறு அல்லது ஏழு வண்டிகளை வாங்க முடிந்த விலை கொடுத்து இப்போது ஒரேயொரு துவிச்சக்கர வண்டியை மாத்திரமே வாங்க முடியும். அந்த அளவுக்கு இப்போது விலை அதிகரித்திருக்கின்றது. இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட துவிச்சக்கர வண்டிகளே இவ்வாறு விற்பனை செய்யப்படுகின்றன.

கிராமப்புறங்களில் முன்னர் முழுமையாகப் பாவனையில் இருந்த துவிச்சக்கர வண்டியின் இடத்தை மோட்டார் சைக்கிள்கள் ஆக்கிரமித்துக் கொண்டன. இதனால் துவிச்சக்கர வண்டிகளைப் பலர் மூலையில் தூக்கிப் போட்;டிருந்தார்கள். அவ்வாறு தூக்கிப் போடப்பட்டிருந்த வண்டிகளை, பலரும் இப்போது தூசு தட்டி, கழுவிப் பூட்டி, பாவனைக்குத் தயாராக்கி இருக்கின்றார்கள்.

மோட்டார் சைக்கிள் பாவையாளர்கள் மட்டுமல்லாமல் கார்களில் போக்குவரத்துச் செய்தவர்களும் துவிச்சக்கர வண்டிக்கு மாறத் தொடங்கி இருக்கின்றார்கள். இதற்கு பெட்ரோலின் விலை அதிகதரித்திருப்பது ஒரு காரணமாகும். அதே வேளை பெட்ரோலின் விலை மேலும் அதிகரிக்கலாம் என்ற எதிர்பார்ப்பும், இரண்டு நாள் மூன்று நாட்கள் வரிசைகளில் காத்திருந்தாலும் . குறிப்பிட்ட சிலருக்கே பெட்ரோலைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதுவும், அவ்வாறு காத்திருந்தாலும், இரண்டு அல்லது மூன்று லீற்றர் பெட்ரோலை மட்டுமே பெற்றுக்கொள்கின்ற நிலைமையும் மக்களை சைக்கிள் பாவனைக்கு மாற்றுவதற்கான பிரதான காரணங்களாகும்.

இலங்கையர்களைப் பொறுத்தமட்டில் துவிச்சக்கர வண்டிப் பாவனை என்பது ஒன்றும் புதிதல்ல. மோடடார் சைக்கிள்கள் சமூகத்தை ஆக்கிரமிப்பதற்கு முன்னர் கிரமாப்பபுறங்கள், ஏன் நகர்ப்புறங்களிலும்கூட, அநேகமானோர் துவிச்சக்கர வண்டிகளையே தமது பிரதான போக்குவரத்துச் சாதனமாகப் பயன்படுத்தி இருந்தார்கள் என்பது இங்கு நினைவூட்டத் தக்கது.

## குதிரைகளின் உணவுப் பஞ்சமே உருவாக்கியது

துவிச்சக்கர வண்டிப் பாவனை என்பது சிக்கனமானது. உடலுக்கு ஆரோக்கியத்தை அளிக்க



வல்லது. மோட்டார் சைக்கிள் ஓட்டங்களின் போது இடம்பெறுகின்ற விபத்துக்கள் துவிச்சக்கர வண்டிப் பாவனையின்போது பெருமளவில் இல்லாமல் போகின்றது. சிறியவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரையில் எந்தவிதமான கட்டுப்பாடுகளுமின்றி போக்கவரத்து செய்வதற்கு துவிச்சக்கர வண்டிகள் பெரிதும் துணை புரிந்தன. அத்துடன் எரிபொருளுக்கான செலவின்றி நடமாடித் திரியவும் அன்றாடக் கடமைகளைச் செய்வதற்கும் துவிச்சக்கர வண்டிகள் உதவியாக இருந்தன.

துவிச்சக்கர வண்டி பதினெட்டாம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சாதனமாகும். ஜேர்மன் பிரபு கார்ல் வொன் ட்ரெயிஸ் என்பவரே 181% ஆம் ஆண்டு இரண்டு இரும்புச் சில்லுகளைக் கொண்டதாக இந்த சாதனத்தை முதன் முதலில் உருவாக்கினார். அப்போது இது ஒரு விநோதமான பொருளாகவே பலராலும் நோக்கப்பட்டது. இதனால் இவரே, துவிச்சக்கர வண்டியின் தந்தையாகக் கருதப்படுகின்றார். அக்காலத்தில் குதிரைகளே பொதுவான போக்குவரத்துக்கு உதவி வந்தன. பலரும் குதிரைகளையும் குதிரை வண்டிகளையுமே போக்குவரத்துக்காகவும் வெளியிடங்களுக்குச் சென்று வருவதற்காகவும் பயன்படுத்தி வந்தனர்.

ஆனால் 1815 ஆம் ஆண்டு சம்பாவா தீவில் சம்போரா என்ற மலைக் குன்றில் பொங்கி எழுந்த எரிமலையின் தாக்கம் உலகெங்கும் பயிர்ச்செய்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இப்போதைய இந்தோனேசிய தீவாகிய சம்பாவா அப்போது கிழக்கிந்திய டச்சு கம்பனியின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. உலக மனித வரலாற்றில் மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய இந்த எரிமலையின் வெடிப்பு காரணமாக 1816 ஆம் ஆண்டு பயிர் அறுவடையில் ஏற்பட்ட அழிவையடுத்து, மக்களின் போக்குவரத்துக்கு உதவி வந்த குதிரைகள் உணவின்றி பட்டினி சாவுக்கு ஆளாகின.

அந்த குதிரைகளின் 'உணவுப் பஞ்சத் தருண'த்திலேயே ஜேர்மன் பிரபு கார்ல் வொன் ட்ரெயிஸ் முதலாவது படைப்பும், மூல அமைப்புமாக துவிச்சக்கர வண்டியை உருவாக்கினார். குதிரைகளின் தேவையை இந்த வண்டி ஈடு செய்ய முயன்றிருந்ததனால், அப்போது டெண்டி ஹோர்ஸ் [சிறந்த குதிரை] மற்றும் ஹொபி ஹோர்ஸ் [பொழுதுபோக்குக் குதிரை] என்ற செல்லப் பெயர்களில் மக்கள் இதனை அழைத்தார்கள். இது ஐரோப்பா எங்கும் பிரபலமாகியது. சில்லுகளுக்கான தற்போதைய டயர் முறைகள் அப்போது கண்டு பிடிக்கப்பட்டிருக்கவில்லை. இரும்புச் சக்கரங்களின் கரடு முரடான ஓட்டம் காரணமாக இந்த வண்டிகளுக்கு போன் ஸேக்கர்ஸ் 'எலும்பு உலுக்கிகள்' என்ற செல்லப் பெயரையும் பெற்றிருந்தன.

இந்தத் துவிச்சக்கர வண்டியே 1860 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பியர் லலிமன்ட், பியர் மிக்கோஸ், எனஸ்ட் மிக்கோஸ் போன்ற கண்டுபிடிப்பாளர்களினால் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகியது. ஒரு பெரிய சில்லையும் ஒரு சிறிய சில்லையும் கொண்டதாகவும், இரண்டு பெரிய சில்லுகளுடன் இரண்டு சிறிய சில்லுகளுமாக நான்கு சில்லுகளைக் கொண்டதாகவும் துவிச்சக்கர வண்டிகள் ஆரம்பத்தில் உருவாகின. முன்னர் இரும்புச் சக்கரங்களைக் கொண்டிருந்த இந்த வண்டிகள் பின்னர் டயர்கள் இணைக்கப்பட்ட வண்டிகளாக மாற்றம் பெற்றன. இந்த மாற்றங்களின் விளைவாகவே இப்போதைய மிதிப் பொறிமுறையிலான துவிச்சக்கர வண்டிகள் உருவாகின. ஆரம்ப காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் மட்டுமல்லாமல் சீனாவிலும் துவிச்சக்கர வண்டிகள் பெரும் வரவேற்பைப் பெற்று பரந்தளவில் முக்கியமாகப் பயன்படுத்தப்பட்டன.

## உலக யுத்தத்தில் பொதி சுமந்தன

துவிச்சக்கர வண்டிகள் பிரயாணத்திற்கு இலகுவாகவும் பாவனைக்கு வசதியானதாகவும் அமைந்திருந்தன. இதனால் நாடுகள் பலவற்றிலும் மக்கள் இதனைப் பயன்படுத்தத் தொடங்கினர்.



பி.மாணிக்கவாசகம்

10 ஆம் பக்கம் பார்க்க...



# காற்று வாங்கப்போகும் மோட்டார் சுந்தரம்பிள்ளைகள்!

துவிச்சக்கர வண்டியின் பாவனை படிப்படியாக அதிகரித்து சீனா போன்ற நாடுகளில் மக்களின் அத்தியாவசியப் பாவனைப் பொருளாகவும் குடும்பத்தின் கௌரவ அடையாளமாகவும் மாற்றம் பெற்றிருந்தது.

உலக நாடுகளில் மக்களின் முக்கிய பாவனைப் பொருளாகத் திகழ்ந்த துவிச்சக்கர வண்டிகள் இரண்டாம் உலக யுத்தத்திலும் தனது முத்திரையை ஆழமாகப் பதித்திருந்தது. இந்த யுத்தத்தில் மோதல்களில் ஈடுபட்ட துணைதுருப்புக்களின் நடமாட்டத்திற்கும், அவர்களுடைய பொருட்களைக் கொண்டு செல்வதற்கும் துவிச்சக்கர வண்டிகள் பயன்படுத்தப்பட்டன. யுத்தகளத்தில் இருந்த துணை துரப்புக்களுக்குத் தேவையான துவிச்சக்கர வண்டிகளை அமெரிக்கா வான் வழியாக விமானத்தில் இருந்து பாரசூட்டுகளின் மூலம் விநியோகித்திருந்தது. இதனால் அமெரிக்கர்கள் துவிச்சக்கர வண்டிகளை ‘பொம்பர் பைசிக்கிள்கள்’ என அழைத்தார்கள்.

இரண்டாம் உலக யுத்தத்தில் ஜேர்மனி, ஜப்பான், பிரிட்டிஷ் படைகளில் துவிச்சக்கர வண்டிப் படை அணிகளும் விசேடமாக உருவாக்கப்பட்டிருந்தன. துவிச்சக்கர வண்டிப் பாவனையில் ஜப்பானிய படையினர், பிரித்தானிய படையினரிலும் பார்க்க அதிக எடையுள்ள படைகளுக்குத் தேவையான பொருட்களை துவிச்சக்கர வண்டிகளில் கொண்டு சென்றுள்ளனர். பிரித்தானிய படைச்சிப்பாய் ஒருவர் துவிச்சக்கர வண்டியொன்றில் 18 கிலோ எடையுள்ள பொருட்களைக் கொண்டு சென்ற அதேவேளை ஜப்பானிய படைச்சிப்பாய் 36 கிலோ எடையுள்ள பொருட்களைக் கொண்டு சென்றுள்ளதாக யுத்தத்தில் துவிச்சக்கர வண்டிப்பாவனை பற்றிய , குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த யுத்தத்தில் ஜப்பான் 50 ஆயிரம் துவிச்சக்கர வண்டிகளைப் பயன்படுத்திய அதேவேளை, நேச நாட்டுப் படையணிகளில் 40 க்கும் மேற்பட்ட துவிச்சக்கரப் படைப் பிரிவுகள் உருவாக்கப்பட்டிருந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலக யுத்தத்தில் துவிச்சக்கர வண்டிகள் பயன்படுத்தப்பட்ட அதேவேளை, சமூகத்தில்





வேலைத்தலங்களுக்குச்சென்று வருவதற்கும் வீட்டுத் தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டிருந்தன. அது மட்டுமல்லாமல் 1890 ஆம் ஆண்டளவிலேயே பெண்களுக்கான துவிச்சக்கர வண்டிகளும் தயாரிக்கப்பட்டிருந்தன. யுத்தத் தேவை மற்றும் வாழ்வியல் தேவைகளுக்கு அப்பால் துவிச்சக்கர வண்டி ஓட்டப் பந்தயத்திற்கும் பொழுது போக்கிற்கும்கூட உலக நாடுகளில் மக்கள் துவிச்சக்கர வண்டியை அப்போதிருந்தே பயன்படுத்தி வந்துள்ளனர்.

இத்தகைய பின்னணியைக் கொண்ட துவிச்சக்கர வண்டியே இலங்கை மக்கள் உணவுப் பஞ்சத்தை எதிர்நோக்கியுள்ள தருணத்தில் வாழ்வியல் தேவைகளுக்காக மீண்டும் பயன்படுத்தத் தலைப்பட்டிருக்கின்றனர். துவிச்சக்கர வண்டிகளை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களில் இளைஞர்களும் அரச ஊழியர்களும் துவிச்சக்கர வண்டிகளைக் கொள்வனவு செய்வதற்காக குவியத் தொடங்கியிருக்கின்றனர். எரிபொருள் நெருக்கடியைத் தொடர்ந்து, துவிச்சக்கர வண்டிகளை வாங்குவதில் பொது மக்கள் ஆர்வாம் காட்டுவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். முன்னர் எப்போதாவது ஒன்று அல்லது இரண்டு துவிச்சக்கர வண்டிகளே விற்பனையாகியதாகவும் இப்போது குறைந்தது ஐந்துக்கும் மேற்பட்ட துவிச்சக்கர வண்டிகள் விற்பனையாகத் தொடங்கியிருப்பதாக வர்த்தகர் ஒருவர் கூறினார்.

இந்தியாவில் இருந்து துவிச்சக்கர வண்டிகளைக் கொள்வனவு செய்யக் கூடியதாக இருப்பதாகவும், ஆயினும் குறிப்பிட்ட ஒரு வர்த்தகப் பெயரைக் கொண்ட துவிச்சக்கர வண்டியே மக்கள் ஆவலோடு எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அரச ஊழியர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளைப் பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கையும் இப்போது அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. எரிபொருள் பற்றாக்குறை காரணமாக அரச ஊழியர்கள் எதிர்நோக்கியுள்ள போக்குவரத்துப் பிரச்சினையைக் கருத்திற் கொண்டு இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் முன்வந்துள்ளது.

## பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வு

துவிச்சக்கர வண்டிப் பாவனையை அதிகரிக்கத் தொடங்கியுள்ள நிலையில் துவிச்சக்கர வண்டி விபத்துக்களில் 96 பேர் உயிரிழந்துள்ளதாகப் பொலிசார் தெரிவித்திருக்கின்றனர். இந்த வருடத்தின் 6 மாத காலப்பகுதியில் 1202 வாகன விபத்துக்கள் ஏற்பட்டிருப்பதாகப் போக்குவரத்துப் பிரிவு பொலிசார் தெரிவித்திருக்கின்றனர். இதில் துவிச்சக்கர வண்டிகள் சம்பந்தப்பட்ட விபத்துக்களில் இறந்தவர்கள் பற்றிய தகவல்களிலேயே மேற்கண்ட விபரத்தைப் பொலிசார் வெளியிட்டிருக்கின்றனர்.

துவிச்சக்கர வண்டிப் பாவனை அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்ற இந்தத் தருணத்திலேயே வீதிகளில் துவிச்சக்கர வண்டிகளின் போக்குவரத்துக்கென தனியான பாதை அமைப்பது தொடர்பில் அரசாங்கம் உடனடியாகக் கவனம் செலுத்தி அதற்கான வசதிகளைச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே மட்டக்களப்பு மாநகர சபையினர் இது விடயத்தில் கவனம் செலுத்தத் தொடங்கியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. இது வரவேற்கப்பட வேண்டியது. இதேபோன்று ,ஏனைய பிரதேசங்களில் உள்ள நகர்ப்புற மற்றும் ஊர்ப்புற உள்ளூராட்சி மன்றங்களும் இதுவிடயத்தில் உரிய கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.


துவிச்சக்கர வண்டிகள் சம்பந்தப்பட்ட விபத்துக்களில் ,ஏற்பட்டுள்ள உயிரிழப்புக்களைக் கவனத்திற் கொண்டு, அதிகரிக்கத் தொடங்கியுள்ள துவிச்சக்கர வண்டிப் பாவனையாளர்களுக்குப் பாதுகாப்பு விதிகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த போக்குவரத்துப் பொலிஸ் பிரிவின் தலைமையகம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது. இது தொடர்பில் நாடெங்கிலும் உள்ள பொலிஸ் நிலையங்கள் மற்றும் பிரதேசப் பிரிவுப் பொலிஸ் அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் பாவனையில் உள்ள துவிச்சக்கர வண்டிகளைச் சோதனையிட்டு உரிய பாதுகாப்பு . முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவிடப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக துவிச்சக்கர வண்டிகளில் முகப்பு விளக்கு இல்லாமை அல்லது அவற்றை ஒளிரவிடாமை அதேபோன்று பின்பக்க விளக்கு ஒளிராதிருக்கின்றமை என்பவற்றுடன், இரவு வேளைகளில் வீதிகளைக் குறுக்காகக் கடக்கும் போது கவலையீனமாக நடந்து கொள்வது, இரவில் வண்டியில் வெளிச்சம் இல்லாமல் கடும் நிறங்களிலான ஆடைகளை அணிந்து செல்வது போன்ற காரணங்களினால் துவிச்சக்கர வண்டியோட்டிகள் விபத்தில் சிக்க நேரிடுகின்றது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

மறுபுறத்தில் கொழும்பு உட்பட பெருநகரப் பிரதேசங்களில் துவிச்சக்கர வண்டிகளுக்கான பாதை அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் துவிச்சக்கர வண்டிகள் வீதிகளைக் குறுக்காகப் பாதுகாப்பாகக் கடப்பதற்குத் தேவையான வசதிகளையும் செய்ய வேண்டியது அவசியம். அத்துடன் துவிச்சக்கர வண்டிகள் அதிக எண்ணிக்கையில் பயணம் செய்வது குறித்து வாகன சாரதிகள் கனரக வாகன சாரதிகளின் கவனத்தையும் அவதானத்தையும் ஈர்ப்பதற்கும் அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியம்.

பொருளதார நெருக்கடியினால் நாட்டு மக்களுடைய வாழ்வியலில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அந்த வகையிலேயே எரிபொருள் பற்றாக்குறை துவிச்சக்கர வண்டிப் பாவனையை ஊக்குவித்திருக்கின்றது. எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டாலும்கூட துவிச்சக்கர வண்டிப்பாவனை நிச்சயமாக மக்களின் வாழ்க்கையில் முக்கிய அம்சமாகத் தொடர்வதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன. எனவே இந்த மாற்றத்தைப் பயனுள்ளதாகவும் பாதுகாப்பானதாகவும் மாற்ற வேண்டியது அரசு, பொலிஸ், பொதும்ககள் என முத்தரப்பினரதும் முக்கிய பொறுப்பாகும்.





# போதையால் பேதை ஆகலாமா?

**ஆண்டு** தோறும் ஜுன் மாதம் 26 ஆம் திகதி போதைப்பொருள் ஒழிப்பு தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. போதைப்பொருள் பாவனை மற்றும் சட்டவிரோத போதைப் பொருள் கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினமாக இந்நாள் அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த சர்வதேச தினம் போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தகத்திற்கு எதிரான ஐ.நா-வின் சர்வதேச தினமாகும். இது 1987-ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ஜுன் 26 அன்று அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

உலகில் தற்போது போதைப்பொருள் பாவனை, போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனை பாரிய பிரச்சினையாக இருக்கின்றது. உலகம் முழுவதும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை கோடிக்கணக்கானவர்கள் இதற்கு அடிமையாகி உள்ளனர்.

அடுத்து உலகளாவிய பீதியில் பெண்கள் எவ்வாறு போதைக்கு அடிமையாகும் வீதம் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது என்பதனை உற்று நோக்கலாம். குறிப்பாக பெண்களது போதைப்பொருள் பாவனை தொடர்பான புள்ளி விபரங்கள் ஆண்டுதோறும் அதிகரித்து கொண்டு போகிறது. கடந்த ஆண்டில் 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய 19.5 மில்லியன் பெண்கள் (அல்லது 15.4 சதவீதம்) சட்டவிரோத போதைப் பொருட்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

புள்ளி விபரங்களின் தரவுகள் பின்வருமாறு கூறுகின்றன.

1.போதைப்பொருள் பாவனையில் மூன்றில் ஒருவர் பெண்ணாக இருக்கிறார் என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

2.பெண்கள் போதைப்பொருட்களின் பால் ஈர்க்கப்படுதல் அதிகமாகவும் போதைப்



பொருட்களுக்கு அடிமையாக இருந்ததன் பின்னரான சிகிச்சைக்கு பிறகும் கூட மீண்டும் அதன் பால் ஈர்க்கப்படும் வாய்ப்புகள் அதிகமாகவே இருக்கின்றது.

3.பெண்களின் பாலியல் ஹோர்மோன்கள் ஆண்களை விட பாரிய விளைவுகளை போதைப்பொருள் பாவனையில் கொடுக்கிறது.

4.போதைப்பொருளைப் பயன்படுத்தும்



பெண்கள் தங்கள் இதயம் மற்றும் இரத்த நாளங்களில் அதிக உடல்பீதியான பக்க விளைவுகளை அனுபவிக்கிறார்கள்.

5.குடும்ப வன்முறையால் பாதிக்கப்படும் பெண்கள் போதைப்பொருள் பாவனைக்கு அதிகளவில் அடிமையாகும் ஆபத்தில் உள்ளார்கள்.

6.விவாகரத்து, குழந்தையின் பராமரிப்பினை இழத்தல், குடும்ப உறுப்பினரின் இழப்பு போன்ற காரணிகள் பெண்களின் போதைப் பொருள் பாவனையைத் தூண்டுகிறது.

7.போதைப்பொருள் பாவனையால் மனச்சோர்வு ,பதட்டம் போன்றவை ஏற்படுதலுக்கான வாய்ப்புகள் மிக அதிகமாகும்.

இவற்றுக்கப்பால் பெண்களது போதைப்பொருள் பாவனையால் பாரதூரமான விளைவுகள் ஏற்படுகின்றன. இயற்கையின் அமைப்பின்படி குழந்தையை ஓர் பெண்தான் பெறுகிறாள். தாய்மை அடைந்திருக்கும் ஓர் பெண் போதைப்பொருளுக்கு அடிமையானவராக இருந்தால் வயிற்றிலிருக்கும் சிசுவினை தற்காலிகமான அல்லது நிரந்தரமான பாதிப்பை ஏற்படுத்துகிறது. கர்ப்ப காலங்களில் புகைப்பிடித்தல் மற்றும் புகையிலை , கஞ்சாபோன்ற போதைப் பொருட்களைப் பாவிக்கும் தாய்மாரின் பிரசவத்தின் ஆபத்து வீதம் இரண்டு முதல் மூன்று மடங்கு அதிகமாகும். கருச்சிதைவு ஏற்படலாம். ஒற்றைத் தலைவலி, வலிப்புத்தாக்கங்கள், உயர் இரத்த அழுத்தம் ஏற்படலாம். குழந்தை இறந்தே பிறக்கும் நிலையும் ஏற்படுகின்றது. இதன் காரணத்தால் உலகளாவிய பீதியில் மருத்துவ உடல் நல துறையினரால் கஞ்சாபோன்ற போதைப்பொருள்கள் கர்ப்ப காலத்தில் பயன்படுத்தக் கூடாது என பரிந்துரை செய்யப்படுகிறது.



சுவர்ணலதா

கர்ப்பமடைந்திருக்கும் பெண்ணின் போதைப்பொருள் பாவனையால் குழந்தைக்கு ஏற்படும் விளைவுகள் பாரியதாகும்.

1. ஹெராயின் மற்றும் மெதடோன் போன்றவை குழந்தைக்கு தீவிரமான சிக்கலை ஏற்படுத்தும். பிறந்த குழந்தைகளுக்கு வலிப்பு ஏற்படலாம்.

2.கொக்கேய்ன் பயன்பாடு நஞ்சுக்கொடிச் சீர்குலைவு போன்ற சிக்கல்களை அதிகமாக்குகிறது.




3.கஞ்சா பயன்பாடு எடை குறைவான மற்றும் பிற்கால கற்றல் மற்றும் நடத்தை சிக்கல்களை ஏற்படுத்தலாம்.

4.மதுபானம் அருந்துகையின் மூலம் வயிற்றிலிருக்கும் குழந்தை கற்றல் மற்றும் உடல் உள சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது.


5.புகைப்பிடித்தல் எடை குறைந்த குழந்தை, முன் கூட்டிய பிரசவம் மற்றும் இறந்து பிறக்கும் குழந்தை போன்ற பாரிய விளைவுகளை ஏற்படுத்துகிறது.

எங்களது நாட்டில் பெண்கள் போதைப் பொருட்களுக்கு அடிமையாகும் விகிதாசாரம் மேலைத்தேய நாடுகளை விட ஒப்பீட்டளவில் மிக மிக குறைவாகவே உள்ளது.

ய்ய்இவற்றுக்கப்பால் நம் இலங்கையில் போதைப்பொருள் பாவனை தற்பொழுது அதிகரித்திருக்கின்றது. அதிலும் வடக்கில் இதன் தாக்கம் மிக அதிகமாக உள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், தொழிலின்றி இருக்கும் இளைஞர்கள் ஆசை வார்த்தை காட்டப்பட்டு இவ்வியாபாரத்தில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றார்கள். வசதியான பொருளாதாரப் பின்னணியை கொண்ட மாணவர்களை இலக்கு வைத்து முல்லைத் தீவு, கிளிநொச்சி போன்ற தமிழர் பிரதேசங்களில் இவ்வியாபாரம் முன்னெடுக்கப்படுகின்றது என செய்திகள் தெரிவிக்கின்றன. இப்போதைப்பொருள் கடத்தல்காரர்கள் இலங்கை முழுவதுமே ஓர் வலையமைப்பை பின்னி செயற்படுகின்றார்கள். கடுமையான சட்டங்களின் மூலமே இவற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும். மலேசியா, சீனா, வியட்னாம், தாய்லாந்து, இந்தோனேசியா மற்றும் அரபு நாடுகளில் கடும் சட்டங்கள் உள்ளன. போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுதல் கையும் களவுமாக பிடிபடும் பட்சத்தில் இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற பல நாடுகள் மரண தண்டனை வழங்குகின்றன. மக்களுக்கு இதன் பாரதூரமும் அழிவும் எவ்வறான விளைவினை ஏற்படுத்தும் என்பதனை ஊடகங்கள் வாயிலாக எடுத்துச் சொல்வதன் மூலமும் கடும் சட்டங்களின் வாயிலாகவுமே இதன் மீட்பு பாதையை நோக்கி நகர முடியும்.




# கைம்பெண்களைக் கண்டுகொள்ளாத சமூகம்!



**கணவனை** இழந்த ஒரு பெண் சமுதாயத்தில் கண்ணுக்குத் தெரியாத கதாப்பாத்திரமாக மாறிவிடுகிறார். இப் பெண்கள் அணிந்த ஆடை அணிகள் பொட்டு மஞ்சள் யாவையும் ஏன் இழக்க வேண்டும்? அது மட்டுமா வீட்டை விட்டு வெளியில் செல்ல முடியாது. மீறி செல்லும்போதும் விதவை எதிரில் வந்து விட்டால் ஐயோ காரியம் கெட்டு விட்டது என்பன போன்ற இழிச்சொல்லுக்கும் ஆளாக நேரிடுகின்றது.

அந்தவகையில் விதவைப் பெண்ணுக்கு சமூகம் திணித்த விடயங்கள் பற்றி பார்ப்போம். முதலாவதாக சதி எனும் உடன் கட்டை ஏறும் வழக்கம்.

தன் கணவன் இறந்து விட்டால், அந்த சிதையில் மனைவியும் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் கணவன் பிரிவைத் தாங்காமல் மனைவி அவ்வாறு செய்து வந்தனர். நாளாக நாளாக உறவினர்கள் சேர்ந்து அப் பெண்ணிற்கு விருப்பம் இல்லாவிட்டாலும் உடன்கட்டை ஏற கட்டாயப் படுத்தினர்.

அதன் பின்னர் சதி ஒழிப்பு சட்டம் 1829 ஆம் ஆண்டு கொண்டு வரப் பட்டது. தற்போது நடைமுறையில் இல்லை.

இரண்டாவதாக ஜவகர் என்னும் முறையும் இந்தியாவில் இருந்துள்ளது. கணவன் போரில் இறந்து விட்டால், அந்த நாட்டை கைப்பற்றிய அரசரிடம் அடிமையாக ஆவதை அவமானமாகக் கருதி கூட்டமாக பெண்கள் அனைவரும் நெருப்பு மூட்டி அதில் புகுந்து உயிரிழந்தனர்.

மூன்றாவதாக சில இடங்களில் கணவனை இழந்த பெண்கள் மொட்டை அடிக்கப்பட்டு மூலையில் இருக்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர்.

மேலும் சில இடங்களில், தனது இறந்த கணவனின் உடலை கழுவியத் தண்ணீரைக் குடிக்கும் அளவிற்குக் கொடுமைப்படுத்தப்படுகிறாள். இத்தகைய விதவை நிலை அவர்களை மட்டும் பாதிப்பதில்லை, அவர்கள் குழந்தைகளையும் பாதிக்கிறது.

நான்காவதாக விதவை பெண்கள் எந்த வித சுபக்காரியங்களிலும் பங்கேற்க விரும்புவதில்லை, அப்படி பங்கேற்க நினைத்தாலும் சில சமூகம் அவர்களை அபசகுனம் எனக் கருதியும் பாவம் எனக் கருதியும் அங்கீகரிக்க மறுக்கிறது. (இன்றும் சில இடங்களில் காணப்படுகிறது)

ஐந்ததாவதாக மறுமணம் செய்ய மறுக்கப்பட்டனர். பின்னர் விதவை மறுமண சட்டம் 1856 இந்தியாவில் கொண்டு வரப்பட்டுள்ளது.

பெண்ணிற்கான ஞாயமான ஆசைகளை கூட மண்தோண்டி புதைத்து விட்டு வெண்புடவைக்குள் வெந்து கொண்டிருப்பவரே விதவைதாய்கள் பிறந்தது முதல் உடன் வருவது பூ,பொட்டு ,மஞ்ஞள், கலர்உடைகள் ,ஆசைகள், கற்பனைகள் சுதந்திரம் இதுபோன்ற அனைத்தும் என்று கூறலாம்.

இடையில் வரும் தாலிக்கொடி உறவின் இழப்பால் இவை அனைத்தையும் குழிதோண்டி புதைத்துவிட்டு தாலிகட்டியவனின் ஞாபகார்த்தமாக தியாகமே உருவாக இருப்பவளே விதவைதாய்கள் சிறந்த அன்பான கணவனெனில் இறந்த பின் கண்டிப்பாக வேதனை கொள்வான் தன் மனைவியின் நிலை கண்டு

பெண்கள் மனம் என்ன மண்மேடையா அவளுக்கும் ஆசைபாசம் உணர்ச்சி போன்றவை இல்லாது போகுமா?

மறுமணம் செய்து வைத்தலே நியாயமான செயல் ஆகும்.

விதவை வாழ்கை வேதனை வாழ்கை விடியட்டும் விதவைகளுக்கோர் விடியல் உடல் தேவை மட்டுமல்ல ஆத்மார்த்தமான மனத்தேவை ஆதரவாக தோள்சாய்த்திட தோள் இல்லாதது தன் எண்ணங்களை பகிர்ந்து கொள்ள தனக்கான துணை இல்லாதது சுருக்கமாக சொன்னால் வேதனை வாழ்க்கையாகும்.

ஆகவே விதவைத் தன்மை ஒவ்வொரு பெண்ணையும் வறுமையில் தள்ளி, அவர்களுக்கான அடிப்படை உரிமைகளை மறுத்து, அவர்களது வாழ்வாதாரத்தைக் கேள்வி குறியாக்குகிறது.

இத்தகைய விதவைத் தன்மையின் விழிப்புணர்வை உலக மக்களிடம் ஏற்படுத்தவே உலக விதவைகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜுன் மாதம் 23ம் திகதி கடைபிடிக்கப்படுகிறது.

இன்று பல விதவைப் பெண்கள் சமூகத்தின் பிடியைத் தகர்த்தெறிந்து தைரியமான பெண்களாக உலா வருகின்றனர்.





சோபிகா
கிருஷ்ணமூர்த்தி




# விதவைகளின் குரலுக்கு செவிமடுப்போம்

**சர்வதேச** விதவைகள் தினம் ஆண்டு தோறும் ஜுன் 23-ம் திகதி கடைபிடிக்கப்படுகிறது. ஏன் இந்த தினம் கடை பிடிக்கப்பட வேண்டும்? இதன் முக்கியத்துவம் என்ன? எப்போது முதன் முதலில் சர்வதேச விதவைகள் தினம் அனுஸ்டிக்கப்பட்டது என்பது போன்ற விடயங்களை நாம் ஒவ்வொருவரும் அறிந்து கொள்வது மிகவும் அவசியமாகிறது.

விதவைகளின் குரல்கள் மற்றும் அவர்களின் கடினமான அனுபவங்கள் மற்றவர்களின் கவனத்தை பெற வேண்டிய அவசியத்தை உணர்ந்து அவர்களுக்குத் தேவையான தனித்துவமான ஆதரவைப் பெறும் நோக்கில் ஐக்கிய நாடுகள் சபை 2011 ஆம் ஆண்டு முதல் ஜுன் 23 ஆம் தேதியை சர்வதேச விதவைகள் தினமாக தீர்மானம் அ/கீஉகு/65/189 அடிப்படையில் தீர்மானத்தை நிறைவேற்றியது.

இன்றைய இந்த உலகில் கிட்டத்தட்ட 258 மில்லியன் கணவனை இழந்த பெண்கள் வாழ்கின்றார்கள். அவர்களில் பலர் வறுமையில் வாடுவது மட்டுமல்ல அவர்களது அடிப்படை உரிமைகளையும் இழந்து வாழ்கின்றார்கள். அவர்களது முழு உரிமையுடன் மற்றும் அங்கீகாரத்துடன் சமூகத்தில் கௌரவமாக வாழ வழி வகுக்க வேண்டும். அவர்களது உரிமைகளில் அவர்களுக்கான அவர்களின் பரம்பரை, நிலம் மற்றும் உற்பத்தி வளங்களின் நியாயமான பங்கை பெற்றுக்கொள்வதற்கான உரிமைகள் உள்ளடக்கபட்டுள்ளன. அது மட்டுமல்ல அவர்கள் ஒழுக்கமான வேலை, சம ஊதியம் பெறுவதற்கு தகுதி வாய்ந்தவர்களாக இருக்கின்றார்கள். கல்வி மற்றும் தொழில் பயிற்சிகளை பெற்று தங்கள் குடும்பங்களை பராமரிக்க அவர்களுக்கு பூரண உரிமை இந்த சமுதாயத்தில் உண்டு. சமுதாய பார பட்சங்களை அகற்றி சமூக தடைகளை உடைத்து சில பாரம்பரியங்களை தகர்த்து தமது உரிமைகளை பெற்றுக் கொள்ள கணவனை இழந்த பெண்களுக்கு உதவிக்கு கரம் நீட்ட சமூகம் முன்வர விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவது அவசியமாகின்றது.

ஐக்கிய நாடுகளின் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் அனுஸ்டிக்கப்பட்டு வரும் இந்த தினம் மூலம், பல விடயங்கள் முன்னெடுக்கப் படுகின்றன.

பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் அகற்றுவதற்கான மாநாடு மற்றும் குழந்தைகளின் உரிமைகளுக்கான மாநாடு ஊடாக சர்வதேச அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றன. சமூக தொண்டு அமைப்புக்கள் சர்வதேச சட்டத்தில் உள்ள விதவைகளின் உரிமைகளை உறுதி செய்வதற்கான அவர்களின் உறுதிப்பாட்டை நிலைநிறுத்த அரசாங்கங்கள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்த வேண்டும். விதவைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக தேசியச் சட்டங்கள் இருந்தாலும், பல மாநிலங்களின் நீதி அமைப்புகளில் உள்ள பலவீனங்கள், விதவைகளின் உரிமைகள் நடைமுறையில் எவ்வாறு பாதுகாக்கப்படுகின்றன என்பது தொடர்பான விவாதங்களை முன் வைக்க வேண்டும்.

கணவனை இழந்த பெண்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான திட்டங்கள் மற்றும் கொள்கைகள், வறுமை ஒழிப்பு, விதவைகளுக்கு கல்வி மற்றும் பிற ஆதரவு ஆகியவையும் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான செயல்திட்டங்களின் பின்னணியில் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் உளவியல் பீதியாக அவர்கள் பாதிப்புக்களில் இருந்து விடுபட்டு நாளாந்த வாழ்வியலை பாதுகாப்பாக முன்னெடுக்க உள ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தும் செயற்திட்டங்களை உருவாக்குதல் அவசியமாகிறது. வளர்ந்த நாடுகளில் உள ஆரோக்கியம் பெரியளவில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு சமூக பணியாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். ஆனால் வளர்ந்து வரும் நாடுகளில் உள ஆரோக்கியம் தொடர்பான தெளிவான விளக்கம் குறைவானதாகவே காணப்படுகின்றது.



> கணவனை இழக்கும் பெண்கள் எத்தகைய சவால்களுக்கு முகம் கொடுக்கிறார்கள்? கணவனின் எதிர்பாராத இழப்பு ஒரு பெண்ணிற்கு மிகப் பெரிய அதிர்ச்சி, துக்கம், என்பவற்றை கடந்து பொருளாதார ரீதியில் பாதுகாப்பு இல்லாத ஒரு சூழலையும் உருவாக்குகிறது. பிள்ளைகளை தன்னந் தனியாக எப்படி வளர்த்தெடுப்பது என்கிற பயம் தலை தூக்குகிறது. பல நாடுகளில் சமூகத்தில் அவர்களை புறந்தள்ளி எந்த ஒரு நல்ல காரியத்திற்கும் முன்னிறுத்த தயங்குவதோடு பாரம்பரிய நடைமுறைகளை திணித்து நான்கு சுவருக்குள் முடக்குகிறார்கள்.

ஒரு உறவை இழக்கும் பொழுது துக்கம் தாங்க முடியாத ஒன்றாகவே அனைவருக்கும் அமைகின்றது. அதிலும் குடும்ப தலைவரை இழக்கும் பொழுது பெரும்பாலான பெண்கள் துவண்டு விடுகிறார்கள். ஒவ்வொருவரின் மன நிலையை பொறுத்து மீண்டும் சகஜமான நிலைக்கு திரும்பும் காலம் வேறுபடும். ஒரு சிலர் குடும்ப சூழல் காரணமாக மனதில் ஆழத்தில் துயரை புதைத்து வைத்து விட்டு குழந்தைகளுக்காக சாதாரணமாக நடமாடுவது போன்று தங்களை காண்பித்துக் கொண்டு, உள்ளத்தில் துயரினால் நொறுங்கி கொண்டிருப்பார்கள். அது எதிர் காலத்தில் மன அழுத்தங்களை கொண்டு வருவது மட்டுமல்ல உளவியல் சார்ந்த மீள முடியாத மனநிலைக்குள் தள்ளப்பட்டு பயம். சோர்வு , எரிச்சல், கோபம், சோகம் போன்ற மனச்சோர்வுக்குள் தள்ளப் பட்டு விடுகிறார்கள்.

கணவனை இழக்கும் பெண்கள் எத்தகைய சவால்களுக்கு முகம் கொடுக்கிறார்கள்? கணவனின் எதிர்பாராத இழப்பு ஒரு பெண்ணிற்கு மிகப் பெரிய அதிர்ச்சி, துக்கம், என்பவற்றை கடந்து பொருளாதார பீதியில் பாதுகாப்பு இல்லாத ஒரு சூழலையும் உருவாக்குகிறது. பிள்ளைகளை தன்னந் தனியாக எப்படி வளர்த்தெடுப்பது என்கிற பயம் தலை தூக்குகிறது. பல நாடுகளில் சமூகத்தில் அவர்களை புறந்தள்ளி எந்த ஒரு நல்ல காரியத்திற்கும் முன்னிறுத்த தயங்குவதோடு பாரம்பரிய நடைமுறைகளை திணித்து நான்கு சுவருக்குள் முடக்குகிறார்கள். அப்படிப்பட்ட பழக்க வழக்கங்கள் அந்த பெண் தன்னைத்தானே அவல சிறைக்குள் பூட்டிக் கொண்டு வெளியே வர முடியாமல் மனசோர்வுக்குள் முடங்கும் நிலை உருவாகிறது.

அதுமட்டுமல்ல பல நாடுகளில், விதவைகளுக்கு சமமான பரம்பரை உரிமைகள் இல்லை. மேலும் அவர்கள் நிலம் பறிக்கப்பட்டு , வீட்டை விட்டு வெளியேற்றப்படும் நிலையும் அல்லது குழந்தைகளிடமிருந்து பிரிக்கப்படும் துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகிறது . தொழில் முயற்சிகளுக்கு ஆதரவு இன்மை, தொழில் இன்மை காரணமாக தற்போது உலகெங்கிலும் கிட்டத்தட்ட பத்து விதவைகளில் ஒருவர் மிகவும் வறுமையில் வாழ்கிறார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதிலும் மிகக் குறைந்த வயதில் திருமணம் செய்து வைக்கப்பட்டு விதவைகள் ஆகும் பெண்கள் பல உரிமை மீறல்களை அனுபவிக்கிறார்கள். உலகளவில் உள்ள சுமார் 258 மில்லியன் விதவைகளில் குறைந்தது



1.36 மில்லியன் இளம் விதவைகள் என எடுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் தெரிவிக்கப்படுகிறது.

இந்த கணவனை இழந்த பெண்கள் யார்? அவர்கள் எம் சகோதரிகள் , நண்பர்கள், உறவுகள் மற்றும் எமது அயலவர்கள் தானே? அவர்கள் வாழ வழி வகுக்க வேண்டிய பொறுப்பு எம்மிடம் தானே உள்ளது ? எனவே எமது சமூகத்தில் பெண்களுக்கான உரிமைகளை கற்றுக் கொடுப்பது மட்டுமல்ல ஒவ்வொரு பெண்ணும் கல்வியை பெற்று சொந்த காலில் நிற்கவும், தலைமை பண்புகளையும் ஒவ்வொரு குடும்பமும் கற்றுக் கொடுக்கமுன் வர வேண்டும். கல்வியறிவு உள்ள பெண்கள் எந்த சூழ்நிலையையும் எதிர் கொள்ள முடியும். சமத்துவம் ஒவ்வொரு குடும்பத்திலும் பேணப்படுமாயின் பெண்களுக்கு எதிரான பல உரிமை மீறல்கள் நடைபெற வாய்ப்புக்கள் அமையாது. மேலைத்தேய நாடுகளில் பெண்களுக்கான உரிமைகள் மதிக்கப்படுவது போல உலகம் முழுவதிலும் சட்டங்களும் பாதுகாப்பு முறைகளும் உருவாக்கப்பட்டு நடைமுறை படுத்தப்பட வேண்டும் அதற்காக அனைவரும் ஒன்றிணைந்து முயற்சி எடுக்க இந்த சர்வதேச விதவைகள் தினத்தில் உறுதி எடுப்போமாக.



ராஜி பாற்றர்சன்
தலைவர்
சர்வதேச ஐக்கிய
மகளிர் கூட்டமைப்பு

# விதவைகளின் உள்ளக்குமுறலின் வெளிப்பாடாக தமிழ்ச் சிறுகதைகள்

### இலக்கியமும் சமூகமும்


இலக்கியம் சமூகத்தின் உற்பத்தி. சமூகத்தின் அழுகிப்போன பக்கங்களை மறைத்து மறைத்து கலாசாரப் போர்வையில் நாற்றங்களுக்கு வாசனைத் திரவியங்கள் தெளித்து மறைத்து வாழும் சமூகக்கட்டமைப்புகளைக் கட்டுடைக்கும் பணியைத் தமிழ்ப்புனைகதை உலகிற்குள் பிரவேசித்த படைப்


சி.ரஞ்சிதா

பாளிகள் பலர் செய்துள்ளனர். அந்த வகையிலே புதுமைப்பித்தனுக்கும் ஜெயகாந்தனுக்கும் சிறுகதை உலகில் அறிமுகம் தேவையில்லை. மத்தியத்தரவர்க்கத்தின் பிரச்சினைகளைத் தமது சிறுககதைகளில் வெளிப்படுத்திய புதுமைப்பித்தன் சிறுகதையின் பிதாமகனாகப் போற்றப்படுகின்றார். வாசகர் மத்தியில் அக்கினிப்பிரவேசம் சிறுகதையின் மூலம் பல்வேறு விமர்சனங்களைப் பெற்றுக்கொண்டு தொடர்ந்து சமூக அவலங்களைக் கதையாக்கியவர் ஜெயகாந்தன். இந்தப் படைப்பாளிகளைப் பற்றியும் அவர்களது படைப்புக்கள் பற்றியும் சொல்லிக்கொண்டு போக தனியொரு இயல் தேவைப்படும். இந்தக் கட்டுரை ஒரு காலகட்டத்தில் விதவைகள் எவ்வாறான துயரங்களைச் சுமந்தனர் என்பதை தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளினூடாக தெளிவுபடுத்துவதை பிரதான நோக்கமாகக்கொண்டு ஆராய்கின்றது.

### விதவைகள் பற்றிய சமூகப்பார்வை

ஒரு பெண் திருமணம் செய்து கணவனை இழந்தால் அவளை இந்தச் சமூகம். விதவை என்று அழைக்கின்றது. பூச்சூடாமை, திலகம் இடாமை, துக்கத்தின் அடையாளமான வெள்ளை நிற உடைகளை அணிதல், சுபகாரியங்களில் பங்குகொள்ளாமை, மறுமணம் புரியாமை முதலிய பல்வேறு செயல்களைக் கட்டாய சட்டங்களாக வகுத்து இவர்களைத் தீண்டத்தகாதவர்களாக ஒரு காலகட்டத்தில் தமிழ்ச்சமூகம் கைம்மைக்கோலம் பூண்டநிலையில் வைத்திருந்தது. சிலவேளைகளில் கணவன் இறந்ததும் உடன்கட்டை ஏற்றும் கொலை வழக்கமும் இருந்துள்ளது. இன்று சமூக மாற்றம், பெண்கல்வி, மறுமணம் முதலியவற்றால் விதவைகள்




## புதுமைப்பித்தனின் ‘வாடாமல்லி’யும் ஜெயகாந்தனின் ‘யுகசந்தி’யும் – ஒரு கண்ணோட்டம்

ஓரளவு சுதந்திரமாக வாழமுற்பட்டாலும் முற்றுமுழுதாக விதவைகள் மீதான சமூக அழுத்தம், தாக்குதல் குறைந்துவிடவில்லை.

### வாடாமல்லி சிறுகதையில் விதவைகளின் அவலநிலை

புதுமைப்பித்தனால் 1934களில் எழுதப்பட்ட வாடாமல்லி சிறுகதை சரசு என்ற பிராமண விதவைப் பெண்ணின் உணர்ச்சி போராட்டங்களையும் அவளைச் சார்ந்து வாழும் சமூகத்தின் அறியாமையையும் அட்டூழியங்களையும் நெற்றிப்பொட்டில் அறைவதுபோல வார்த்துள்ளது. வாடாமல்லி என்பது ஒரு வகை மலர். இது மற்ற பூக்கள் போல வாடியத் தோற்றத்தோடு காட்சித்தராமல் எப்போது மலர்ந்து பொலிவோடு இருப்பதால் வாடாமல்லி என்று அழைக்கப்படுகின்றது. ஆனால் இச்சிறு


வாடா மல்லி

கதையில் புதுமைப்பித்தன் வாடாமல்லி என்று எதைச் சொல்கிறார் என்பது முரணாகவே இருக்கின்றது. உள்ளத்தில் வாடி, உருவத்தில் இளமையோடு விதவைக்கோலமாக நடமாடியதால் சரசு என்ற பெண்ணை வாடாமல்லி என்று சுட்டிக்காட்டியிருக்கலாம்.


இச்சிறுகதையின் தொடக்கத்தில் சரசு என்ற பெண்ணை அறிமுகம் செய்யும் புதுமைப்பித்தன் அவள் பெயர் சரசு ஒரு பிராமணப் பெண் பெயருக்கு தகுந்தது போல் இருக்க வேண்டும் என்று


புதுமைப்பித்தன்

நினைத்தோ என்னவொ பதினேழு வயதிற்குள்ளேயே சமூகம் அவளுக்கு வெள்ளைக் கலையை மனமுவந்து அளித்தது சரசு ஓர் உலாவும் கவிதை. இயற்கையின் பரிபூரணக் கிருபையில் மலரும் பருவம்இயற்கையின் போக்கைத் தடைசெய்துகொண்டு அவள் தியாகம் செய்கிறாள் என்று கூறும் போதே ஒரு விதவையின் கடக்கமுடியாத துயரத்தை ஒரு காலகட்டத்தில் அவள் வாழ்ந்த வாழ்க்கையின் ஆற்றாமையையும் இந்த வரிகளினூடாக அறியமுடிகின்றது. புதுமைப்பித்தன் இந்தச் சிறுகதையை எழுதிய காலகட்டம் தமிழ்ச்சூழலில் பெண் அடிமையும் கலாசாரக்கட்டுப்பாடுகளும் மிக இறுக்காமாக இருந்த காலமாக அவர் எழுதிய சிறுகதையினை வைத்து நோக்கமுடிகின்றது. சரசு வாயில்லா அப்பாவி பெண். தனது குடும்பமும் பிராமணச் சமூகம் கட்




டுக்குள் வைத்திருக்கும் பொருத்தமற்ற கட்டுப்பாடுகளையும் உடைத்தெறிய முடியாமல் பதினாறு வயதிலே கணவனை இழந்து வெள்ளை உடைக்குள் தனது உணர்ச்சிகளை அடக்கி வைத்து இந்தச் சமூகத்தை எதிர்க்காமல் தனக்குள் புதைத்து அழுகின்றாள். இவள் மீது காதல் கொண்டு இவளுக்கு வாழ்க்கை கொடுக்கமுன் வந்த ஒரு வாலிபனின் எண்ணங்களை மறுத்து தனக்கு உடல் உறவு மட்டும்போதும் என்றும் திரு


ஜெயகாந்தன்

மணம் வேண்டாம் என்று மறுக்கின்ற சோகப்பாத்திரமாகவே இக்கதை முழுக்க வலம் வருகின்றாள். அவளை விரும்பும் வாலிபன் இவளைத் திருமணம் செய்து மறுவாழ்வு கொடுக்க முன்வந்தபோதும்கூட அதை இந்தப் பிராமணப் பெண் மறுக்கின்றாள் என்றால் இந்தச் சமூகம் எந்தளவு தூரம் விதவைகளை உயிரோடு சாகடித்துள்ளது என்பதையும் பிராமணர்கள் மத்தியில் சாதி, சமயம், சமூகக்கட்டுப்பாடுகள் இறுக்கமாக இருந்துள்ளது என்பதையும் அறியமுடிகின்றது. இன்றும் பிராமணர் மத்தியில் இந்தச் சமூகம்சார் இறுக்கம் இருந்து வருவதை காணமுடிகின்றது.


சரசு பெற்றோரைத் தட்டியது கிடையாதுஅவளும் பெண்தானே! அச்சம் என்பதுதான் அவளுக்கு அணிகலன் என்று சமூகம் சொல்கிறதேஅவளைப் பார்த்தால் யாருக்கும் கண் கலங்கும். அவள் கண்களிலே ஒரு நிரந்தரமான துயரம், போக்க வழியில்லாத துன்பம் குடிகொண்டிருக்கும் இப்படி இந்த விதவைப்பெண் பற்றி இந்தச் சிறுகதை சொல்லும் ஒவ்வொரு வரிகளும் ஒரு காலகட்டத்தில் விதவைகளின் வேதனையையே வெளிப்படுத்துகின்றது.

சரசு என்ற பெண் உடல் உணர்ச்சிக்கு போராடி அதனை

15 ஆம் பக்கம் பார்க்க...

# விதவைகளின் உள்ளக்குமுறலின் வெளிப்பாடாக தமிழ்ச் சிறுகதைகள்




ஓர் ஆணிடம் பெற முடியாமலும், மறுமணம் செய்யும் துணிச்சல் இன்றியும் கிணற்றில் விழுந்து இறந்து போகிறாள். இவளுக்கும் இவளை விரும்பிய இளைஞனுக்கும் இடையில் நடைபெற்ற உரையாடலின் பின்பே இந்த விதவைப்பெண் இறந்து போகின்றாள். அவனிடம் உடல் உணர்வுகளைத் தணிக்கக்கேட்டு,

அவன் அதை மறுத்து வெளியேறிய பின் இவளது தற்கொலை நிகழ்கின்றது. ஓர் ஆன்மா தனக்கான துணையைத் தெரிவுசெய்து வாழ இந்தப் போலி கலாசாரங்கள் எவ்வளவு தடையாக இருக்கின்றது என்பதையும் அந்தக் கலாசார காரசாரத்தை எதிர்த்துப் போராட திராணியற்ற இந்த விதவை பெண்ணின் ஆன்மா உயிர் நீத்தமையையும் விதவை



என்ற சொல்லின் உள்ளே எத்தனை எத்தனையோ சொல்லில் அடங்காத வேதனைகள் குடிகொண்டிருப்பதையும் தெளிவாகக்காட்டுகின்றது.

## ஜெயகாந்தனின் யுகசந்தி சிறுகதையில் விதவைகளின் அவலநிலை

1960களில் வெளிவந்த யுகசந்தி என்னும் சிறுகதை கௌரிப்பாட்டி, கீதா ஆகிய இரண்டு விதவைகள் பிராமணச் சமூக பின்னிணியில் தமது வாழ்க்கையின் துயரங்களை துமந்து வாழ்வதையும் அதிலிருந்து விடுதலைபெற முயல்வதையும் வெளிப்படுத்துகின்றது. கௌரிப்பாட்டிக்கு பதினைந்து வயதாகியபோது கணவன் இறந்து போக தனது ஒரே மகன் கணேசையரை விதவையாகவே வாழ்ந்து வளர்த்து திருமணம்செய்து வைத்து அவருக்கு நான்கு பிள்ளைகள் என்று ஒரு நீண்ட பயணத்தை பிராமண சமூகத்தின் வழக்கப்படி கடக்கின்றார். கௌரிப்பாட்டி போலவே அவரது பேத்தி கீதாவும் விதவை. இந்தப்பாட்டி தன் இளமையைக் கடந்தவர். ஆனால் கீதா இளம் விதவை. பிராமண ஆசாரங்களுக்காக தனது இளமையை, உணர்வுகளை யாருக்கும் விட்டுக்கொடுக்காது வீட்டைவிட்டு வெளியேறி இன்னுமொரு திருமணம் செய்கின்றாள். இதனை இவளது தந்தை கணேசையர் மறுத்தாலும் கௌரிப்பாட்டி தான் வாழ்ந்த விதவை வாழ்வின் கொடூரங்களை உணர்ந்து கீதாவின் மறுமணத்தை ஏற்றுக்கொள்கின்றார்.

ஆசாரம், கட்டுப்பாடு என்று கணேசையர் என்ற பாத்திரம் தன் மகள் கீதாவை வெறுக்கும்போது கௌரிப்பாட்டி நம்ப சாஸ்திரம் ஆசாரம்! அப்படின்னா நீ என்ன பண்ணியிருக்கனும் தெரியுமா? என்னை என்ன பண்ணித்து தெரியுமா அந்த சாஸ்திரம்?... அப்போ நீ பால் குடிக்கிற கொழந்தைடா எனக்குப் பதினைந்து வயசுடா. என் கொழந்தை என் மொகத்தை பார்த்துப் பேயைப் பார்த்தது போல் அலறித்தேடா! பெத்த தாய்கிட்டே பால் குடிக்க முடியாம என்று கூறுவது சிறிய வயதில் மொட்டை அடித்து வெள்ளைத்துணி கொடுத்து பிராமணப் பெண்களுக்கு விதவைப்பட்டம் கொடுத்த வன்மத்தை வெளிப்படுத்துகின்றது. ஒரு குழந்தையே பார்த்து பயப்பிடும் அளவிற்கு இவர்களது தோற்றம் இருந்துள்ளமை கவலைக்குரியது.

சாஸ்திரம் கெட்ட மூதேவி. ஆசாரமான குடும்பத்துப்பேரைக் கெடுத்த சனி – செத்துத் தொலைஞ்சுட்டானு தலையை முழுகித் தொலைன்னு சொல்றேன்: என்று கீதாவின் மறுமணத்தை வெறுக்கும் அவளது தந்தை, அடி பாவிப் பெண்ணே என் தலையிலே




தீயை வச்சுட்டியேடி என்று அவளது அம்மாவும் ஆதங்கப்படுவதினூடாக விதவைகளுக்கு மறுவாழ்வு, சமூக அந்தஸ்து என அனைத்தும் மறுக்கப்பட்டு அவளை பிணத்தைவிட மோசமாக நடத்திய சமூகக்கட்டமைப்பை இங்கே அவதானிக்கமுடிகின்றது.

தனது மகள் கீதா இளம் விதவையாக இருக்கும்போதே அவளது பெற்றோர் இன்னுமொரு குழந்தையைப் பெற்றுக்கொள்கின்றனர். உணர்ச்சிகளை அடக்கி ஆட்சிசெய்யமுடியாத அவர்களுக்கே இந்த நிலை என்றால் இந்த விதவை கீதாவை ஒரு உயிராக மதிக்கவே இல்லை இந்தப் பிராமணச் சமூகம். ஆனால் இந்தக் கொடுமைகளுக்கு கட்டுப்படாமல் இந்தக் கீதா என்னும் பாத்திரம் மறுமணத்தை செய்துகொண்டது விதவைகளைச் சிந்திக்க வைக்கின்ற நோக்கத்திற்காகவே ஜெயகாந்தன் பயன்படுத்தியிருக்கின்றார் என்று கூறலாம்.

## முடிவுரை

விதவைகளைப் பற்றியும் அவர்கள் வாழும் பிராமணியச் சமூகத்தின் இறுக்கமான கட்டுப்பாடுகளை ஒரு காலகட்டத்தில் அறிந்த படைப்பாளிகள் தமது சிறுகதைகளில் படைத்திருக்கின்றமை கொடுமையானது. வேதங்களும் தர்மசாஸ்திரங்களும் சொல்வதை பிராமணச் சமூகம் கண்மூடி ஏற்றுக்கொண்டு பல பெண்களைக் கண்குருடாக்கியமையையும் இச்சிறுகதைகள் எடுத்துக் காட்டுகின்றன. பிராமணர் அல்லாத சமூகத்திலும் விதவைகளின் துன்பத்துயரங்கள் படைப்பிலக்கியங்களில் பலரால் படைத்தளிக்கப்பட்டிருக்கின்றது. இது ஒரு காலகட்ட சமூகத்தின் வரலாற்று ஆவணங்களாக இருப்பினும் இன்று இதன் தாக்கங்கள் வழக்கொழிந்து போயிருப்பினும் விதவைகள் அனுபவிக்கும் உளநெருக்கடிகள், சமூக அழுத்தங்கள், விதவை தலைமையில் வாழும் குடும்பங்களின் நிலை மாறாமல் தான் இருக்கின்றது. பெண் என்ற ஒரு பாலின காரணத்தை வைத்துக்கொண்டு அவளைப் பல்வேறு வகையில் சுரண்டும் சமூக பிற்போக்கு சிந்தனைகள் மாறவேண்டும். விதவை என்ற பதமும் அழிக்கப்பட்டு அவளும் வாழ்வதற்கு தகுதியானவளே என்ற ஒளி அனைவர் உள்ளத்திலும் பிறக்கவேண்டும்.

# கைம்பெண்கள்...

## நாம் கடந்துபோக முடியாத எங்களில் ஒருத்தி!

**விதவை வாழ்வின் சோக சித்திரிப்பாக தனலட்சுமி – அழகி தமிழ்த் திரைப்படத்தைத் துழாவி ஆராய்கின்றது இக்கட்டுரை.**







**தங்கர்பச்சான்** இயக்கத்தில் 2002 ஆம் ஆண்டு தமிழ்த்திரையுலகில் சஞ்சரித்த திரைப்படங்களில் அழகி திரைப்படம் தனிக்கவனத்திற்குரியது. நந்தித்தா தாஸ், தேவயாணி, பார்த்திபன் ஆகிய முக்கியப் பாத்திரங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இத்திரைப்படம் கிராமிய மண்வாசனையையும் நகர்புறச்சூழலையும் இருவேறு தளத்தில் அமைத்து வெள;வேறு சூழலில் வாழும் மனித நடத்தைகளையும் அவர்களது குணங்களையும் யதார்த்தபூர்வமாக படைக்கப்பட்டள்ளது. அழகி திரைப்படம் சொல்லும் கதைக் கரு, கதையோட்டம், காட்சியமைப்பு, பாத்திர படைப்பு தனித்துவமானதாக ஏனைய




படங்களிலிருந்து மாறுபட்டதாக உள்ளத்தை உருக்கி சோகத்தை நிலைநாட்டிச் செல்லும் பாங்கில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திரைப்படம் பற்றிய கருத்தையும் விமர்சனத்தையும் தாண்டி இங்கு கதாநாயகியாக வலம் வரும் தனலட்சுமி என்னும் விதவையின் வாழ்க்கைச் சோகங்களைக் காண விழைகிறது இக்கட்டுரை.

தனலட்சுமியும் சண்முகமும் சிறுவயதிலேயே நண்பர்களாக அறிமுகமாகி பின் ஒருவரையொருவர் சொல்லாமலே காதலிக்கின்றனர். கிராமிய வாழ்வின் மண்வாசணை மாறாதது போல இவர்களது காதல் தொடர்கிறது. அக்கால சமூக வழக்கத்தில் பெண்ணைத் தாய்மாமனுக்கோ அல்லது இரண்டாம் தாரமாகவோ இல்லையெனில் ஆடு மாட்டை விலை பேசி விற்பது போல திருமணச் சந்தைக்கு வழங்கும் நிலை தனலட்சுமியின் வாழ்விலும் ஏற்படுகின்றது. சண்முகம் உயர்படிப்பிற்காக நகரத்திற்கு செல்ல, தனலட்சுமிக்கு அவளது அக்கா இறந்துபோகவே இரண்டாம் தாரமாக தன் மாமாவை திருமணம் செய்து ஓர் ஆண் குழந்தைக்கு தாயாகிறாள். காலவோட்டத்தில் சண்முகம் வளர்மதி என்ற படித்த பெண்ணை திருமணம் செய்து இரண்டு பெண் குழந்தைகளுக்கு தந்தையாகின்றான். தன் பழைய காதலி தனலட்சுமியின் கணவனுக்கு உதவி செய்து ஒரு வேலையும் சண்முகம் வாங்கி கொடுக்கும் சூழல் திபை;படத்தின் கதையோட்டத்தில் எடுத்துக்காட்டப்படுகின்றது.

ஒரு தடவை சண்முகம் வேலைப்பார்த்து திரும்பும் வழியில் ஒரு தாய் பாதையில் அடிப்பட்ட தன் பிள்ளையைக் கட்டிப்பிப்பிட்து ரத்த காயங்களைக் கண்டு அழுது புலம்புகின்றாள். இதனைக் கண்ட சண்முகம் அவள் தனது பழைய காதலி தனலட்சுமி என்பதை அறிந்து கண் கலங்குகின்றான். விதவை கோலத்தில் பல இன்னல்களை அனுபவித்த தனலட்சுமி கிடைக்கும் கூலி வேலை, ஏனைய வேலைகள் என தன் பிள்ளையை வளர்க்க அரும்பாடுபட்டு தெருவோரத்திலேயே ஏழை மக்களோடு மக்களாக வாழ்கின்றாள். தன் கணவனிடமிருந்து எந்தப் பதிலும் வராததால் அவனைத் தேடி நகரத்திற்கு வந்ததும் அவனது பிணத்தையே பார்க்க முடிந்தது என்றும் சண்முகத்திடம் சொல்லி வேதனையடைகின்றாள்.

இவள் மீதுள்ள மாறாத காதலால் ஏதாவது உதவிசெய்ய நினைக்கும் சண்முகம் தனக்கு தெரிந்த ஒரு செல்வந்தரிடம் வேலைக்கு அனுப்பி வைக்கின்றான். அங்குச் சென்று வீட்டுப்பணிப்பெண்ணாக தனலட்சுமி வேலைப்பார்த்தாலும் கணவன் இல்லாத விதவையாக ஒரு சில நேரங்களில் ஏளனமாக நடத்தப்படுகின்றாள். இவளது நிலைமையால் இவளது மகனும் துன்பப்படுகின்றான். இந்த விதவையால் தனது பிள்ளைக்கு கல்வியை வழங்கவோ, மகிழ்ச்சியான சூழலையை வழங்கவோ முடியாமல் ஒடுக்கப்பட்ட மன நிலையில் வாழுகின்றாள். விருந்தினர்கள் அந்த செல்வந்த வீட்டுக்கு வந்தபோது தனலட்சுமியின் மகனுக்கு உணவு கொடுக்காமல் ஏசும் வேலைக்காரி ஒருத்தியின் கேவலமான வார்;த்தைகளைக் கேட்ட சண்முகம் அவளைத் தனது வீட்டுக்கு வேலைப்பார்க்க வருமாறு கேட்டபோது தனலட்சுமி அதனை மறுக்கின்றாள். தனது காதலன் என்பதாலும் ஒரு பெண்ணின் கணவன் என்பதாலும்




அவள் இதை மறுக்கின்றாள். பிறகு சண்முகம் கெஞ்சிக் கேட்பதால் அவனது வீட்டிற்கு வேலைக்காரியாகச் செல்கின்றாள்.

விதவை ஒருத்திக்கு எல்லா செல்வந்த வீடும் ஒரே மாதிரியான பார்வையையே செலுத்துகின்றது. இங்கும் சண்முகத்தின் மாமி இவளை தினமும் வேலைக்காரி என்று ஏளனமாகப் பார்ப்பதும் திட்டுவதுமாக தனது கேவலமான குணத்தைக் காட்டுகின்றாள். இவற்றையெல்லாம் பொருத்துக்கொண்டு தனலட்சுமி சண்முகத்திற்காக வேலை செய்கின்றாள். இவளது மகனுக்கு கல்வி கற்கும் வாய்ப்பு சண்முகத்தால் கிடைத்ததால் இந்த வீட்டில் தொடர்ந்து பணியாற்றினாள். அதுவரை காலமும் சண்முகத்தின் மனைவி வளர்மதி தனலட்சுமியோடு அன்பாக நடந்து வந்தாளும் இவர்களுக்கிடையில் ஏற்கனவே இருந்த காதலை அறிந்து கொண்டு தனது கணவனிடம் இவளை வேறு வீட்டிற்கு வேலைக்கு அனுப்புமாறு சொல்லி சண்டையிடுவதோடு இவர்கள் இருவர் மீதும் சந்தேகம் இல்லையாயினும் தனக்கு பயமாக இருக்கின்றது என்று அழுகின்றாள். இதனை அறிந்த தனலட்சுமி யாருக்கும் சொல்லாமல் கடிதம் ஒன்றை எழுதி வைத்துவிட்டு மகனை அநாதை இல்லத்தில் சேர்த்துவிட்டு எங்கோ சென்றுவிடுகின்றாள். கடிதத்தில் சண்முகத்தின் குடும்பத்திற்குள் தன்னால் பிரச்சினை வரக்கூடாது என்று மிகவும் கவலையோடு எழுதிச் செல்கின்றாள். இறுதியில் தனலட்சுமியின் மகனை அநாதை இல்லத்திலிருந்து சண்முகமும் அவனது மனைவியும் அழைத்து வந்து கல்வியை வழங்கி ஆதரித்தாலும் கடைசி வரை தனலட்சுமி என்ற விதவை போன இடம் தெரியாமல் படத்தின் காட்சிகளையெல்லாம் கடந்து மறைந்து ரசிகர் இதயத்திலும் கனமான வலியோடு மௌனச் சிலையாக படிகின்றாள்.

அழகி என்று இந்தத் திரைப்படத்திற்கு தலைப்பு சூடிய இயக்குனர் இவள் விதவை என்னும் அழகியா? முகபாவத்தில் அழகியா? தன் அழகான குணங்களினால் அழகியா? என்பதை ரசிகரே தீர்மானிக்கட்டும் என்று விட்டுச்சென்றுள்ளார். இந்தத் திரைப்படம் முழுக்க முழுக்க தனலட்சுமியின் உணர்வுகளை, அவளது அமைதியான சுபாவத்தை, ஏக்கங்களோடு உள்ளே ஆறாத வலிகளோடு சமூக வாழ்வை கடக்கத்துடிக்கும் அமைதியோடுகூடிய போராட்டத்தையும் விதவைகோலத்தில் காட்சியாக்கியுள்ளது.

பொதுவாக கீழைத்தேய கலாசார கட்டமைப்பில் பெண் என்ற ஒரு பாலினம் பிறந்து மண்ணில் மடியும் வரை அடக்கு முறைகளுக்கும் வன்முறைகளுக்கும் ஆளாவது சர்வசாதாரணமாக போய்விட்டது. அதிலும் விதவைகளின் நிலை இதைவிட மோசமானது. மறுமணம் செய்வதற்கோ, சுபகாரியங்களில் பங்குபற்றவோ, சுதந்திரமாக நடமாடவோ, தொழிலுக்குச் செல்வதற்கோ முடியாத நிலையில் தான் வாழும் சமூகத்தினாலேயே அவமதிக்கப்படுகின்றனர். இதனையே இந்தத் திரைப்படத்தில் வரும் தனலட்சுமிக்கும் நிகழ்கின்றது. கணவன் குடிகாரனாக இருந்திருந்தால் பிரச்சினைக்கு மத்தியல் அவள் வாழ்ந்திருந்தாலும் அவனோடு இருந்திருந்தால் செல்வந்தர் வீடுகளில் அவமானப்பட்டிருக்கத்தேவையில்லை. கணவன் இல்லாத விதவை என்பதாலேயே அவள் தன் மகனுக்காக வாழமுற்பட்டு தன் காதலன் முன்னாலும் தலைகுனிந்து வாழ்கின்றாள். இந்தத் திரைப்படத்தில் தனலட்சுமியை விதவை என்னும் புரட்சி பாத்திரமாக காட்டியிருக்கலாம்.



மறுமணம் செய்து சுகபோக வாழ்வை வாழும் ஒரு பாத்திரமாகக்கூட காட்டியிருக்கலாம். ஆனால் சமூகத்தின் உண்மை நிலையை விதவைகள் பலரால் வாழமுடியாமல் போவதையும் வாழ்க்கை கொடுக்க வருபவரும் பாதிப்படைவதையும் இத்திரைப்படம் சொல்லி வெற்றியடைந்துள்ளதோடு விதவையாக உலாவிய தனலட்சுமி போல பல பெண்கள் இந்த அவனியில் விதவை கதாநாயகிகளாகக் காட்டப்படாமல் மறைந்து வாழ்வதையும் சொல்லாமல் சொல்கிறது.


# சிரிக்க... சிந்திக்க...


## கடந்து போக....






















ஜூலை 9....

### காத்து காத்து கண்கள் பூத்திருக்கும் காலி காலிமுகத்திடல்!

04 ஆம் பக்கத் தொடர்ச்சி...

செயலாளர் நேரத்துக்கு செல்ல முடியாமைக்கு இந்தப்போராட்டம் தான் காரணமாக இருந்துள்ளது. அத்துடன் ஒரு ஸ்திரமற்ற நிலையையும் இது உருவாக்கியுள்ளது. இதனால், சர்வதேச நாணய நிதியம் இலங்கையை மீட்கத் தவறினால், இந்தப் போராட்டத்தை அரசு காரணமாகக்காட்ட முற்படும்.

#### போராட்டத்தின் நாடித்துடிப்பை அதிகரித்தல்

இவைபோன்ற பல காரணங்கள் இந்தப் போராட்டத்தில் ஒரு தொய்வு நிலையை ஏற்படுத்தியிருக்கும் பின்னணியில்தான், போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்காக அல்லது அதனைத் தீவிரப்படுத்துவதற்காக எதனையாவது செய்யவேண்டும் என்ற தேவை போராட்டக்காரர்களுக்கு ஏற்பட்டது.

அதனால்தான் ஜனாதிபதியின் பிறந்த தினத்தன்று ஜனாதிபதி செயலகத்தின் ஏனைய வாயிற் கதவுகளையும் மூடி அவர்கள் தமது போராட்டத்தை தீவிரப்படுத்தினார்கள். இதன்போது சுமார் 20 பேர் கைதாகி பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். ஜூலை 9 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதியை வெளியேற்றுவது எனவும் அன்றைய தினம் சபதமெடுத்தார்கள்.

என்ன நடைபெறும்?
பொறுத்திருந்து பார்ப்போம்!